பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 22 வியாழக்கிழமை (06.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :41

# புனரமைப்பைப் புலிகள் முன்னெடுக்க ஒரு கட்டமைப்பை உருவாக்குங்கள்!

## யாழ்ப்பாணத்தில் ரணில் கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஜனவரி6

**தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைப் புலிகள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டனர். ஆகவே, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தப் பணியைப் புலிகள் முன்னெடுப்பதற்கான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும்படி அனுசரணையாளர்களை நாங்கள் கேட்கலாம்.**

**அரசும், புலிகளும் வேகமாகப் பேசி இதைச் செய்யலாம் என நான் கருதுகின்றேன்.**

**- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறினார் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.**

நேற்றுப் பகல் யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் வந்த அவர், சுனாமிப் பேரலை அனர்த்தத்தில் மக்களுக்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்ட பின்னர் - கொழும்பு திரும்புவதற்கு முன்பதாக - செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அந்தச் செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:-

காலி வீதி மற்றும் வீதிகளைத் திருத்தவும், பாலங்களைப் புனரமைக்கவும், மீட்புப்பணிகளை மேற்கொள்ளவும் சர்வதேச நாடுகளின் படைகள் வந்துள்ளன.

இந்தப் படைகள் இங்கு வந்தமைக்கான விவரங்களை அரசிடம் கோரியுள்ளோம். அவை கிடைத்தபின் கொள்கை அறிக்கை ஒன்றை நாம் வெளியிடுவோம்.

சிறிய அளவிலும் எமது நாட்டின் பாதுகாப்பை இவர்களின் வருகையால் பாதிக்கச்செய்ய அனுமதிக்கமுடியாது.

அவரசகாலத் தேவைக்காவும், மனிதாபிமானத் தேவைக்காகவும் என்றால் இவர்களின் வருகையை ஏற்கலாம்.

மிக முக்கியமான கட்டத்தில் நாம் இருக்கிறோம். அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். எனவே, இவர்களின் வருகை உண்மையில் மனிதாபிமானத்துடன் தொடர்புடையது என்றால் அதில் தப்பில்லை.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு யாழில் சிறப்பான வரவேற்பு!

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிக்குச் சென்ற அவர் அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் வீதிகளில் கூடி நின்று மக்கள் சிறப்பான வரவேற்பை வழங்கினர். நேற்றுக் காலை 9.30 மணிக்கு பலாலி வந்தடைந்த அவர், இராணுவப் பாதுகாப்பு தொடரணியுடன் அச்சுவேலி - வல்வை வீதியூடாக வடமராட்சி சென்றடைந்தார். முதலில் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர் பேசினார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கொலின் பவல் நாளை வருகிறார்

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை வருகிறார். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இலங்கை அரச அதிகாரிகளுடன் அவர் செல்வாரென கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்தது.

கொலின் பவலுடன் சர்வதேச ஒத்துழைப்புக்

(16ஆம் பக்கம் பார்க்க)

### தூதுவர் நிருபமா ராவ் அறிவிப்பு:

## இந்தியாவின் நேரடி உதவிகள் எவையும் புலிகளின் பிரதேசங்களுக்குக் கிட்டாது!

கொழும்பு.ஜன.6

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இந்தியா நேரடியாக எந்தவிதமான உதவிகளையும் செய்யாது. இந்திய அரசின் உதவிகள் அனைத்தும் இலங்கை அரசிடமே ஒப்படைக்கப்படும். இலங்கையின் இறைமைக்குக் குந்தகமான எந்தவொரு செயலிலும் இந்தியா ஈடுபடாது - என திட்டவட்டமாக அடித்துக் கூறுகின்றார். இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருபமா ராவ்.

நேற்று மாலை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தியத் தூதுவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், தமிழ்ப் பிரதேசங்களுக்கு - குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு - அரசின் உதவிகள் கிடைக்கவில்லை. சர்வதேச சமூகங்களினால் அனுப்பப்படும் உதவிகளும் கிடைப்பதில்லை. எனவே, இப்பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நாடுகள் நேரடியாக உதவிகளை வழங்கவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன? என்று இந்தியத் தூதுவரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் மேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலுங்கள்!

### அரசிடமும், புலிகளிடமும் கொலின் பவல் வேண்டுகோள்

சுனாமி கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட பாரிய பாதிப்புக்கள் இலங்கை மற்றும் இந்தோனேஷிய ஆகிய நாடுகளில் நீண்டகாலமாக நிலவிவரும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பத்தைத் தோற்றுவித்துள்ளன என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

சுனாமி கடற் கொந்தளிப்புக் காரணமாக இலங்கை மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கொலின் பவல் மேலும் கூறியுள்ளதாவது-

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்தச் சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நீண்ட காலமாக இலங்கையில் நிலவிவரும் இன முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்வது தொடர்பாக இருதரப்பும் இதயசுத்தியுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று சுனாமி அலைகளின் தாக்கத்தால் தோன்றியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இன, மத பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் உதவ வேண்டும். இதேசமயம் பாதிக்கப்பட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொறுப்பு இராணுவத்திடமா? தமிழ்க் கூட்டமைப்பு கடுஞ்சீற்றம்!

பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளை வழிநடத்தும் பொறுப்பு மாவட்ட ரீதியாக இராணுவத்தின் கட்டளையிடும் தளபதிகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுவிடயமாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா -

இது தொடர்பான ஜனாதிபதியின் பணிப்புரை தமிழர் தரப்பை சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

பேரலை... அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இப்பணியை ஆற்றும் பொறுப்பு அரச அதிபரிடமிருந்து பறிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் இராணுவத் தளபதிகளிடம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி வழங்கும் மாநாடு இன்று ஜகார்த்தாவில்

கொழும்பு.ஜன.6

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்கான விசேட மாநாடு இன்று வியாழக்கிழமை இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறவிருக்கிறது. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மாலைதீவு, இந்தோனேஷியா, மலேஷியா ஆகிய நாடுக ளுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப்படும்.

இலங்கை சார்பாக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், நிதியமைச்சர் சரத் அமுனுகம, திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகவும், தேவைப்படும் சர்வதேச உதவிகள் தொடர்பாகவும் திட்ட அறிக்கைகள் கொண்டுவரப்பட வேண்டுமென மா நாட்டு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தபோதும், சர்வதேச சமூகத்தின் உதவி (02ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பணிகளுக்குத் தடங்கல் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேதனை

### அதன் பணிப்பாளர் ரெஜி விளக்குகின்றார்

கொழும்பு.ஜன.6

ஸ்ரீலங்கா அரசு தமிழ்ப் பகுதிகளுக்கு வழங்கும் நிவாரண உதவிகள் போதுமானவையாக இல்லை. கடந்த இரு தினங்களாக கிழக்கு மாகாணத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுவரும் நிவாரணப் பணிகளுக்கு தடங்கல்களும், தடைகளும் ஏற்பட்டுவருகின்றன.

- இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிப்பாளர் கே.பி.ரெஜி தெரிவித்தார். இக் கழகத்தின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. அப்போது ரெஜி இக்கருத்தைத் தெரிவித்தார்.

இது குறித்துப் பணிப்பாளர் ரெஜி மேலும் தெரிவித்ததாவது -

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்த 19 வருடங்களாகத் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. அப் பகுதிகளில் கழகத்தின் சுமார் 8 ஆயிரம் ஊழியர்களும் 3 ஆயிரத்து 500 பணியாளர்களும் செயற்பட்டு வருகின்றனர். டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமிப் பேரலை

(16ஆம் பக்கம் பார்க்க)

# உரிய உதவித் திட்டங்களை உலக வங்கி தயாரிக்கின்றது

கொழும்பு,ஜன.6

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நீண்டு கால உதவிகளையும், நிவாரணங்களையும் வழங்குவதற்கான திட்டங்களை உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன கூட்டாக வகுத்து வருகின்றன.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று அங்கு நிலைமைகளைப் பார்வையிட முன்னதாகக் கருத்து வெளியிட்ட உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் வுல் பென்ஸன், 'பெருமளவு பாதிப்பை ஏற்படுத்திய இந்த அனர்த்தத்திலிருந்து மீள்வதற்குச் சர்வதேச சமூகத்தின் பெரும் பங்களிப்பு அவசியம்' - என்று சுட்டிக்காட்டினார்.

மனிதநேய அடிப்படையிலான நீண்டகால உதவிகளைப் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்குவதற்காகத் தமது பங்காளிகளுடன் தோளோடு தோள் நின்று சேவையாற்ற வேண்டியுள்ளதாகவும் உலக வங்கியின் தலைவர் குறிப்பிடுகின்றார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டவுடன் பாதிப்புற்றநாடுகளுக்கு வழங்குவதற்கு உலக வங்கி 250 மில்லியன் டொலர்களை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-க)

# சுத்திகரிப்பு தொழிலாளருக்கு அவசரமான அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

வடமராட்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள முகாம்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்கு உடனடியாக ஊழியர்கள் தேவைப்படுவதாக வடமராட்சி அனர்த்தச் செயலணியின் சுகாதார அதிகாரி அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமராட்சிப் பகுதி இடம்பெயர் முகாம்களிலுள்ள மல கூடங்கள், சுற்றுப்புறங்கள் என்பவற்றை துப்புரவு செய்வதற்குப் பகல் முழுநேரமாகப் பணியாற்றக்கூடியவர்கள் தேவை எனவும் -

கடமையாற்றுபவர்களுக்குப் போதுமான ஊதியம் வழங்கப்படும் எனவும் -

பணிபுரிய விரும்புவர்கள், வடமராட்சி அனர்த்தச் செயலணியுடன் உடன் தொடர்புகொள்ளுமாறும் -

கேட்கப்பட்டுள்ளது. (ஐ-12)

# சுனாமியால் பாதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்குத் தேவையில்லையென்றும், தமது நாட்டைத் தங்களால் கட்டியெழுப்பமுடியுமென்றும்கூறி இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் இம்மாநட்டில் திட்ட அறிக்கைகள் எதனையும் சமர்ப்பிக்காதிருக்கத் தீர்மானித்துள்ளன என கொழும்பில் ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல், ஐ.நா.செயலர் கோபி அனான், உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் வுல் வென்சன், யுனிசெவ் தலைவி கரோல் பெலாமி, ஆஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹொவார்ட், ஜப்பானியப் பிரதமர் ஜூனச்சிரோ கொய்சுமி, இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் மற்றும் வியட்நாம், கம்போடியா, இங்கிலாந்து, மாலைதீவு, மலேசியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டின் பின்னர் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல், ஐ.நா. செயலர் கோபி அனான் ஆகியோர் இலங்கை வரவுள்ளனர். (எ-க)

# காங்கேசன் பெற்றோலிய களஞ்சியத்தில் சிரமதானம்

அரியாலை,ஜன.6

சுனாமி கடல் கொந்தளிப்பினால் சேதமாக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறையில் அமைந்திருக்கும் எரிபொருள் நிரப்பும் களஞ்சியத் தொகுதியை கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டுத்தாபன ஊழியர்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

கூட்டுத்தாபன அலுவலகம் கடல் கொந்தளிப்பினால் பெரிதும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் பல லட்சம் ரூபா நஷ்டமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் நிரப்பும் களஞ்சியங்கள் ஒருவாறு தப்பிவிட்டன. இதேவேளை, சேதமாக்கப்பட்ட இந்தப் பகுதியை கொழும்பில் இருந்து வநத கூட்டுத்தாபன அதிகாரிகள் பார்வையிடடுச் சேத விவரங்களை மதிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை - குடாநாட்டுக்குத் தேவையான அளவு டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் என்பன தினமும் தனியார் பவுஸர் வாகனம் மூலம் எடுத்துவரப்படுவதால் அவற்றுக்குத் தட்டுப்பாடு இல்லை என்று கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

# புனரமைப்பைப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது நாட்டில் இருக்கும் ஹெலிக்கொப்டர்கள் சிறியவை. எமக்கு மீட்புப் பணிகளுக்குப் பெரிய அளவிலான ஹெலிகொப்டர்கள் தேவையாக உள்ளன.

இந்தோனேஷியா கூட நிவாரணப் பணிக்கு வெளிநாட்டுப் படைகளை அழைத்துள்ளது.

இவர்களின் வருகையில் பாதுகாப்புக்கு எந்தவித பிரச்சினையும் வரக்கூடாது என்பதை அரசுக்குக் கூறியுள்ளோம்.

பல்வேறு நாடுகள் நமக்கு உதவ முன்வந்துள்ளன. அதை நான் வரவேற்கின்றேன்.

முதலில் இந்தியா உதவிக்கு வந்தது. அதைத் தொடர்ந்து ஐ.நாவுடன் சேர்ந்து உதவிவழங்கும் நாடுகளும் முன்வந்துள்ளன.

கூட்டு நாடுகளின் கூட்டம் ஒன்று இன்று (வியாழன்) இந்தோனேஷியாவில் நடைபெறவிருக்கின்றது. ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் அதில் கலந்துகொள்கிறார். அதன்பின் ஐ.நா. சபையினர் ஜெனிவாவில் கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

வெளிநாட்டு உதவிகள் குறித்து வெளிப்படையாக நாம் கூற விரும்புவது ஒன்றுதான். அவற்றின் உதவிகள் அடிமட்ட மக்களுக்குப் பயன்படவேண்டும். பாரபட்ச மில்லாமல் சகலருக்கும் அந்த உதவிகள் சமமாகப் பங்கிடப்படவேண்டும்.

எங்கள் படைகளில் பெரும்பகுதியினர் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் மீட்புப் பணிக்கு இயந்திர சாதனங்கள் தேவைப்படுகின்றன. பல இடங்களில் ஏராளமான சடலங்கள் தோண்டியே எடுக்கப்பட்டுள்ளன.

ஹிக்கடுபவில் இடம்பெற்ற ரயில் அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்பதில் இராணுவத்தினரும், கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணியில் ஈடுபடுவதுடன் எமது படையினர் சட்டம், ஒழுங்கு விடயங்களையும் கவனித்து வருகின்றனர்.

வெளிநாட்டுத் துருப்புக்கள் இங்கு எடுத்து வந்துள்ள இயந்திர சாதனங்கள் மிகப் பாரமானவை; பயனுள்ளவை. வீதிகளைப் துப்புரவு செய்ய அவற்றைப் பயன்படுத்தலாம்.

அம்பாறை மாவட்டத்தில் மீட்பு. நிவாரணப் பணிகளை மேற்கொள்ளப் பெரிய ஹெலிகொப்டர்கள் தேவையாக உள்ளன. வீதிகள் சேதமடைந்ததால் வீதிப்போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன - என்றார்.

அந்நியத் துருப்புக்கள் வருகையால் அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டில் பாதிப்பு ஏற்படுமா? - என அவரிடம் கேட்கப்பட்டது.

அமைதிப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுப்பதில் மிகவும் உணர்வுபூர்வமாக நாம் இருக்கிறோம். அந்த நாடுகள், மனிதாபிமான செயற்பாடுகளுக்கு மட்டும் படைகளைப் பயன்படுத்தும் என உறுதியளித்துள்ளன. அதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அமைதிச் செயற்பாடுகளுக்கு அவர்களால் இடையூறு ஏற்படும் என நான் நம்பவில்லை அப்படி ஏற்படும் பட்சத்தில் அதனைப் பிரச்சினையாக முன்னெடுப்போம் - என்றார் ரணில்.

வெளிநாடுகள் வழங்கிய உதவிகள் இன்னமும் வடக்கு - கிழக்குக்கு வந்துசேராதது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? - என்று கேட்டபோது அவர் கூறியதாவது:-

இங்குவந்தபின்தான் இதை என்னால் அறிய முடிந்தது. சில பொதிகள் விமான நிலையத்தில் தேங்கிக்கிடக்கின்றன. இந்த முறைப்பாடு குறித்து அரசுடன் பேசுவோம். அவசர உதவிகள் நிச்சயம் இங்கு வந்து சேரவேண்டும். வராவிட்டால் நாளை (வியாழன்) கூடும் கட்சித் தலைவர் கூட்டத்தில் அதைக் கிளப்புவேன். ஜனாதிபதியின் கவனத்துக்கும் அதைக் கொண்டு செல்வேன். - என்றார் ரணில்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் போகும் எண்ணம் இந்தச் சந்தர்ப்பத்தில் இல்லை. - என்றும் அவர் கூறினார்.

எமது கட்சியின் சில எம்.பிக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளனர். அங்கு நிவாரண உதவிப்பொருள்களை வழங்கியுள்ளனர். மேலும் ஒரு தொகுதி எம்.பிக்கள் அங்கு நிவாரணப்பொருள்களை எடுத்துச் செல்லவிருக்கின்றார்கள் - என்றும் ரணில் கூறினார்.

'கட்டுநாயக்க விமான நிலையம் மூலம் பொருள் எடுத்துவருவதில் தாமதம் ஏற்பட்டால் பலாலி விமான நிலையம் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்யலாமே!' எனக் கேட்டதற்கு 'நல்ல ஆலோசனை அரசுக்கு இதை அறிவிக்கிறேன்' என்று பதில் தந்தார் ரணில்.

தமிழர் தாயகத்தில் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்காக கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என்று புலிகள் கேட்கிறார்கள். அதுபற்றி என்ன கருதுகிறீர்கள்? எனக் கேட்டதற்கு அவர் கூறியதாவது:-

### நிவாரணப் பணிகளில் புலிகள் தலைமை

இயற்கை அனர்த்த சேதம் ஏற்பட்டதுமுதல் மீட்புப் பணியிலும், நிவாரணம் வழங்களிலும் தலைமை தாங்கி விடுதலைப் புலிகள் செயற்படுகின்றனர். அதற்காக அவர்கள் பல்வேறு வளங்களை ஒருங்கிணைக்கவேண்டியுள்ளது. அரச இயந்திரமான பிரதேச செயலாளர்கள் அவர்களுக்கும் பக்கபலமாக இயங்குகின்றார்கள்.

அனர்த்தம் ஏற்பட்டு இருவாரங்களாகிவிட்டன. ஆகவே, தீவிர மாற்றங்கள் எதையும் இப்போது செய்யமுடியாது. இதற்கு மாறாக செய்ய முயன்றால் பிரச்சினைகளும், குழப்பங்களும் ஏற்படும். ஆகவே, இந்தப் பணியை மேற்கொள்வதற்கான கட்டமைப்பு (Mechanism) ஒன்று கண்டுபிடிக்கப்படவேண்டும்.

நிவாரணப் பணிகளை ஏற்கனவே விடுதலைப் புலிகள் ஆரம்பித்துவிட்டார்கள். அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகிவற்றுடன் இணைந்து புலிகள் இந்தப் பணியை முன்னெடுப்பதற்கான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும்படி அனுசரணையாளர்களை நாங்கள் கேட்கலாம்.

எனது, கருத்துப்படி அரசுடனும் புலிகளுடனும், கதைத்து வேகமாக இதைச் செய்யலாம் என்பது எனது கருத்து.

நான் அறிந்தமட்டில், நிவாரணப் பணியில் முல்லைத்தீவு உட்பட ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் சிறப்பாக விடுதலைப் புலிகள் முனனெடுத்துள்ளனர்.

தெற்காக இருந்தால் என்ன வடக்காக இருந்தல் என்ன பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள் தான். எனவே, மக்கள் பயன்படக்கூடிய் திட்டங்களைக் கண்டுபிடிக்கவேண்டும்.

சில இடங்களில் கோயில்களும், தேவாலயங்களும்தான் பாதிக்கப்பட்ட மக்களைப் பராமரிக்கும் பணியை முன்னெடுக்கின்றனர்.

நான் கொழும்பில் இருந்திருந்தால் யாழ்ப்பாணத்தைப் பற்றி அறிந்திருக்கமுடியாது.'

அனர்த்தம் நிகழ்ந்தபோது வீட்டில் இருந்தேன். வெள்ளவத்தையில் கடல் கொந்தளிப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்று நிலைமைகளைப் பார்த்தேன். அதைப்போல இங்குள்ள நிலைமையைப் பார்க்க வந்தேன் இதில் அரசியல் நோக்கம் ஏதும் இல்லை.

பல்வேறு இடங்களைப் பார்க்கும் போது, எவ்வாறு புனர்வாழ்வு நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பது என்பது குறித்து முடிவு செய்யக் கூடியதாக இருக்கும், அனர்த்தம் ஏற்பட்ட இடங்களில் அனர்த்தப் பாதிப்புகளுக்கு இடையில் வித்தியாசங்கள் உண்டு.

இதனால்தான் நேரடியாகப் போய்ப் பார்க்க வேண்டியுள்ளது.

பேச்சுகள் மீள நடைபெறவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. இடைக்கால நிர்வாகசபை தொடர்பான எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை. இப்போது ஏற்பட்ட அனர்த்தம் அதை மேலும் முக்கியமாக்கியுள்ளது.

எமது அரசு நவம்பர் 2003 இல் ஓர் அறிக்கை வெளியிட்டது. பேச்சு மீள ஆரம்பிக்கவேண்டும் என்ற அன்றைய நிலைப்பாட்டை இன்றும் நாங்கள் மாற்றிக்கொள்ளவில்லை.

பாதிக்கப்பட்ட சில பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் தலைமையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இது விடயமாக அரசின் நிலைப்பாடு என்னவென்பது எனக்குத் தெரியாது. ஆனால், எமது கருதுக்களை நாம் அரசுக்குத் தெரிவிப்போம். அதைவிட அரசு சார்பில் கருத்து எதையும் என்னால் கூறமுடியாது - என்றார் ரணில்.

அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் அமெரிக்கத் துருப்புக்கள் இங்கு பிரசன்னமாவது, புலிகளை குழப்புவதாக அமையுமா - எனக் கேட்டதற்கு - அப்படி நான் நினைக்கவில்லை. அவர்கள் (அமெரிக்கத் துருப்பினர்) காலி வீதிப் பாலங்களைத் திருத்துகின்றார்கள் - என்றார் ரணில்.

புனரமைப்புப் பணிகளுக்குப் பொறுப்பாக இராணுவ அதிகாரிகளை நியமித்து ஜனாதிபதி விடுத்திருக்கின்றார் எனக் கூறப்படும் உத்தரவுகுறித்து அவரிடம் வினவப்பட்டது.

இங்கு வந்தசமயமே அது பற்றிக் கேள்விபட்டேன் கொழும்பு திரும்பிய பின் இதை அரசிடம் கேட்டு உறுதி செய்யவிருக்கின்றேன் என்று பதிலளித்தார் அவர்.

மீள் கட்டுமான வேலையை ஆறு மாத காலத்தில் பூர்த்தி செய்யலாம் என ஜனாதிபதி கூறுவது குறித்துக் கேட்டபோது 'அதை ஜனாதிபதியிடமே கேளுங்கள்!' என்று பதிலளித்தார் ரணில்.

### வல்லையில்

நேற்று வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் மக்கள் மத்தியில் உரையாற்றியபோது ரணில் கூறியதாவது:-

மிகச் சேதமடைந்த இந்தக் கிராமத்தைப் பார்க்கவே இங்கு வந்துள்ளேன். மக்கள் உயிரிழந்துள்ளார்கள், உடமைகள் அழிக்கப்பட்டுள்ளன.

மீனவர்கள் தமது படகுகளை இழந்துள்ளார்கள் அதனால் அவர்களது வருமானம் முடங்கியுள்ளது.

இங்கு நடக்கும் மீட்புப் பணி மற்றும் அழிவுகள் குறித்து அறியவே வந்துள்ளேன்.

கடந்த இருபது வருடகால யுத்தத்தால் நீங்கள் அழிவுகளை சந்தித்தீர்கள். மீண்டும் இன்று இயற்கை அனர்த்தத்தால் அழிவை சந்தித்து நிற்கிறீர்கள்.

சுனாமி இலங்கையின் ஏனைய பகுதியையும் அழித்துள்ளது. மொறட்டுவமுதல் வடமராட்சி வரை இது அழிவை ஏற்படுத்தியுள்ளது. மீன்பிடிக் கைத்தொழில் நாசமாகியுள்ளது, உல்லாசத்துறையும் நாசமாகியுள்ளது.

நீங்கள்தான் கூடுதல் அழிவைச் சந்தித்துள்ளீர்கள். இங்கு செயற்படும் கூட்டுச் செயலணி, இங்குள்ள நிலமையைக் காலையில் எமககு விளக்கிக்கூறியது.

இந்த நிலைமை குறித்த தகவல்களை, அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் புனரமைப்பில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களுக்கும் கூறுவேன். வடக்கு - கிழக்கு - தெற்கு என சகல பகுதிகளுக்கும் உதவுமாறு கூட்டாக சர்வதேசத்திடம் கோருவேன்.

புனரமைப்பிற்கான உதவிகள் சமமாக - நீதியான முறையில் - பகிரப்படவேண்டும். என பதை நாங்கள் உறுதிப்படுத்தவேண்டும். அனர்த்தங்களால் ஏற்பட்ட சேதத்திலிருந்து மீளும்போது நாட்டில் சமாதானம் ஏற்பட சகலரும் பங்களிக்கவேண்டும். அதற்காகப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவேண்டும்.

இங்குள்ள மக்களின் இன்னல்கள், கவலைகளில் நானும் பங்குகொள்கின்றேன்.

இங்கு கண்ணால் பார்த்தவற்றை - கேட்டவற்றை எல்லாவற்றையும் அரசுக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக்கூறுவேன்.

- என்றார் ரணில். (எ-க-3-5-70-173)

# ரணிலுக்கு யாழில் சிறப்பான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் ஆறுதலாகப் பதிலளித்தார். பின்னர். காலை 10.30 மணியளவில் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகததில் அதன் பிரதிநிதிகள், அரச அதிபர், கல்வி அதிகாரிகள், சுகாதார உத்தியோகத்தர்கள், கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அங்கு சுனாமி புனர்வாழ்வு அனர்த்த செயலக பிரதம இணைப்பாளர் சி.வி.கே. சிவஞானம் மக்களின் பாதிப்பு விவரம் அடங்கிய மகஜரை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

வடமராட்சியில் அமைந்துள்ள மக்களுக்கான உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு நடவடிக்கை கரும பீடத்துக்கும் ரணில் சென்றார். அங்கு சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு கூட்டுச் செயலணியை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின் சேதமடைந்த வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியைப் பார்வையிட்டார். தொடர்ந்து வடமராட்சி வடக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளுடன் கலந்துரையடினார். அதன் பின் வட இந்து மகளிர் கல்லூரி, புலோலி மெதடிஸ்த த.க.பாடசாலை ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை அவர் பார்த்தார். பொலிகண்டி, திக்கம், இன்பருட்டி, சுப்பர்மடம், பருத்தித்துறைமுனை, குடத்தனை, மணல்காடு ஆகிய பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவர் பார்வையிட்டார்.

(எ-க-3-5-13-70-173)


# எதிர்க்கட்சித் தலைவரின் வருகையின் போது...



எதிர்க்கட்சித் தலைவர் ரணில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதிக்குப் புறப்படுவதையும் பின்னர் அங்கிருந்து திரும்புவதையும்...



பத்திரிகையாளர்கள் சந்திப்பில்...




நெல்லியடியில் அனர்த்த செயலணியில்...

படங்கள்: வசந்தன்



அழிவுகளைப் பார்வையிடுகிறார்...



மக்களுக்கு ஆறுதல் கூறுகிறார்...



வெயிலில் காத்திருந்த மக்கள் மத்தியில் உரையாற்றுகிறார்...

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களை துப்புரவுசெய்ய முன்வாருங்கள்!

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைத் திருத்தியமைப்பதற்கு முன் வருமாறு இளைஞர்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சார்ந்தோருக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருக்கிறது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையே இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

பேரவை விடுத்த செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டதாவது:-

இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக் கப்பட்ட எமது பிரதேசங்களில் மீட்புப்பணியும், துப்புரவுப்பணியும், தொற்றுநோய்களைத் தடுப் பதற்கான நடவடிக்கைகளும் அவசரமாக மேற்கொள்ளவேண்டியுள்ளது.

எமது மக்களுக்கான பணிகளை நாமே செயற்படுத்த வேண்டியுள்ளதால், அனைத்துக் கல்வி நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், விளையாட்டுக் கழ கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற் றைச் சேர்ந்தவர்கள் எமது பேரவையுடன் தொடர்புகொண்டு வாகன வசதிகளைப் பெற்று பணியாற்ற முன்வருமாறு அழைப்பு விடுக் கின்றோம் - என்றுள்ளது. (ஐ-202)

# கிழக்கு மக்களின் மருத்துவ உதவிக்காக 5 லட்சம் ரூபா

## தேசிய எழுச்சிப் பேரவை வழங்கியது

அரியாலை,ஜன.6

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப் பட்ட மக்களின் துயர்துடைப்புப் பணிக்காக யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை யினால் சேகரிக்கப்பட்ட ஐந்து லட்சம் ரூபா நிதி கிழக்கு மாகாண மக்களின் மருத்துவ சேவைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

கிழக்கு மாகாண மக்களின் மருத்துவ சேவைக்கு அந்த நிதியை நேரடியாகக் கையளிப பதற்காக தேசிய எழுச்சிப் பேரவையின் ஊட கப் பேச்சாளரான ப.கனகலிங்கத்திடம் எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் நேற்று உத்தியோகபூர்வமாகக் கைய ளித்தார்.

அத்துடன், கிழக்கு மாகாண மக்களின் துயர்துடைப்புக்காகத் தேசிய எழுச்சிப்பேரவை யின் ஏற்பாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள களை ஏற்றிக்கொண்டு ஏழு வாகனங்கள் கிழக்கு மாகாணத்திற்கு நேற்று புறப்பட்டுச் சென்றன. (ஐ-17)

### தமிழர் புனர்வாழ்வுக்கழக ஏற்பாட்டில்

# ஆஸ்திரேலிய மருத்துவர் குழு தாயகத்துக்கு வந்துள்ளது

கடற்பூகம்பத்தினால் கடுமையாகப் பாதிக்கப் பட்ட அம்பாறை மாவட்டத்தில் அல்லற்படு கின்ற மக்களுக்குச் சேவையாற்ற வந்துதவு மாறு தமிழர் புனர்வாழ்வுக் கழக சர்வதேச கிளைகளுக்கு ஊடாக விடுத்த வேண்டுகோளை ஏற்று ஆஸ்திரேலியாவிலிருந்து சிறப்பு மருத் துவர்குழு வருகை தந்துள்ளது.

05 வைத்தியர்கள் அடங்கிய இக்குழுவி னர் கடந்த 4ஆம் திகதி அம்பாறை மாவட்டத் தில் தமது சேவைகளை ஆரம்பிப்பதற்காகச் சென்றடைந்துள்ளனர்.

அம்பாறை சென்றடைந்த சிறப்பு வைத் திய குழுவினரை அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலகத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் வரவேற்றுக் கலந்துரையாடி மக்களினதும் மாவட்டத்தின தும் நிலைமைகளையும் விரிவாக விளக்கினர்.

மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்ட குழுவினர், உடனடியாகவே தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். (8)

# பிறந்தநாள் விழாவை எளிமையாக நடத்த முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.6

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80ஆவது பிறந்தநாள் அறக் கொடை விழாவை மிகவும் எளிமையான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த தம் காரணமாக விழாவை மிக எளிமையாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் மிக அடக்கமாக நடைபெறவுள்ள நிகழ்வில் மொறிசியஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் தெய்வ நாயகம்பிள்ளை ஈஸ்வரன் கலந்து கொள்வார்.,

'சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்' என்ற நூலும், 'வாழ்க எம் அன்னை' என்னும் முத்து விழா மலரும் வெளியிடப்படும். தொடர்ந்து அறக்கொடை வரிசையில் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்திற்கும், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கும் நிதி வழங் கும் நிகழ்வு இடம்பெறும். (ஐ-204)


## வணங்குகிறோம்

நாளைய தினம்
அகவை 80 நிறைவுறும்
அன்னை
சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி (J.P.)
அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம்.



அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
கந்தரோடை,
சுன்னாகம். (40496)(26)


# உடுபுடைவைகள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஜன.6

சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தர் கள் சுனாமி கடல் பேரலையினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு 30 ஆயிரம் ரூபா பெறு மதியான உடுபுடைவைகளை வழங்கியுள்ள னர்.

பளைப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு இப் பொருள் களை நேற்று வழங்கினார்கள். (8-117

# தொண்டர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்கான உதவு பணிகளில் ஈடுபடுவதற காக யாழ்.மாவட்டத்திலுள்ள சகல சி.பி.ஆர் தொண்டர்களையும் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு கரவெட்டி பிரதேச செய லக முன்றிலில் ஒன்றுகூடுமாறு கரவெட்டி சமூக சேவை உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

தொண்டர்கள் சமுகமளிக்கும் போது சி.பி. ஆர். தொண்டரென உறுதிப்படுத்தும் அடை யாள அட்டையையும் கொண்டு வருமாறும் தெரிவித்துள்ளார். (8-202)

## படவரைஞர் கற்கைநெறிக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.6

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் படவரை ஞர் கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

சுனாமி பேரனர்த்தம் காரணமாக பாதிக்கப் பட்ட மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் முகமாக ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் கற்கை நெறிக்கு விண்ணப் பித்த அனைவரையும் இநத நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் என்.யோகராஜன் கேட்டுள்ளார். (8-202)

## எட்டுலொறிகளில் உதவிப்பொருள்கள்

வடமராட்சி,ஜன.6

வடமராட்சியில் நலன்புரி நிலையங்களில் உள்ள இடம் பெயர்ந்தோர்களுக்கு விவசாய கால்நடை அபிவிருத்தி அமைசசு எட்டு லொறிகளில் கொழும்பிலிருந்து நிவாரணப் பொருள்களை எடுத்துவந்து விநியோகித்தது. இதே போல மக்கள் வங்கியும் மூன்று லொறிகளில் பொருள்களை எடுத்து வந்து வழங்கியது. (ஐ-173)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி பவானி லோகேந்திரம்
அவர்களின் அன்புக் கணவர்
குமாரசாமி லோகேந்திரம்
அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
சுண்டிக்குளி. (சி-40253)(26-14-15)
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

## துயர் பகிர்கிறோம்

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலர்
திரு.சி.மகாலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி இராசம்மா சின்னத்தம்பி
அவர்களின் மறைவு குறித்து துயரத்தில் இருக்கும் அன் னாரது குடும்பத்தவர்களுடன் துயர் பகிர்ந்து அனுதாபத் தைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
கந்தரோடை.
சுன்னாகம். (40495)(33-14-15-26)
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்



எமது நிலைய ஸ்தாபகரும் சமூக முன்னோடியும் இளங்கோ சனசமூக நிலையத் தலைவர்
திரு.மு.இராஜவரோதயன்
அவர்களின் தந்தையுமான
சேவா திலகம்
கந்தப்பு முருகேசு
(இளைப்பாறிய அதிபர்)

மண்ணில் 26-11-1910
விண்ணில் 02-01-2005

அவர்கள் 02-01-2005 இல் காலமானார். அமரரின் பிரிவுத் துயரில் ஆழ்ந் திருக்கும் குடும்பத்தினருடன் நாமும் பங்குகொள்கின்றோம்.

அல்வாய் வடக்கு.
(40498)(26-14-15)
இளங்கோ ச.ச.நிலையம்,
இளங்கோ மழலைகள் கல்விப்பூங்கா.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 642 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 04-1-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4195023 - 4212516 |

லக்கினம் கும்பம்

வெற்றி இலக்கங்கள்
17 31 34 37

ஜக்பொட் பரிசு ரூபா.17,75,150/- வெல்லப்பட்டுள்ளது
இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,71,101 | 10/- | 37,11,010/- |
| 2.இலக்கங்கள் | 34,096 | 20/- | 6,81,920/- |
| 1.இல + லக்கினம் | 33,748 | 30/- | 10,12,440/- |
| 2.இல + லக்கினம் | 3,110 | 100/- | 3,11,000/- |
| 3.இலக்கங்கள் | 901 | 500/- | 4,50,500/- |
| 3.இல + லக்கினம் | 82 | 5,000/- | 4,10,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 17,75,150/- | 17,75,150/- |
| மொத்தம் | 4,43,048 | | 99,52,520/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 99,52,520/-

தொடர் இல. 5170551 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஜனவரி 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வித்த

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4199266-4-52
4203083-7-39
4211188-7-39
4208171-8-77
4195496-1-18

FG WILSON

புது யுகத்திற்கான ஜெனரேட்டர்கள்

அதிக சக்தி செயற்திறன் உழைப்பு



உலகத்தரம் வாய்ந்த FG வில்சன் ஜெனரேட்டர்கள் அதிக சக்தியுடன் செயற்படவல்லது. அதி பாதுகாப்பு மிக்க இவ் ஜெனரேட்டர்கள்.பல வருட காலம் நீடித்து உழைக்கக்கூடியது. 6kVA-2200kVA சக்தியையும் கொண்டது அத்துடன் பிரவுன்ஸ் கம்பனியின் விற்பனைக்கு பிந்திய சேவையும். உத்தரவாதமும் இவ் ஜெனரேட்டர்களை மேலும் வலுவடைய செய்து இதன் பயன்பாட்டை அதிகரிக்கின்றது.

1 வருட உத்தரவாதமும் விற்பனையின் பிந்திய 24 மணித்தியால சேவையும்.

ஏக விநியோகஸ்தர்கள்
பிரவுன் அன்ட் கம்பனி லிமிட்டெட்.,
மின்வலு சக்திப்பிரிவு
481,டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை,கொழும்பு-10. தொலைபேசி: 2663270,2663272 தொலைநகல்: 4721444
மின்னஞ்சல்: psc@brownsgroup.com இணையத்தளம்: www.brownsgroup.com

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# உதவுவதற்கு வழியுண்டு

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வீடு, வாசல்கள், சொத்துக்கள், உடைமைகளை இழந்தோருக்கு உதவவும் -நாட்டில் அழிந்த சமூகக் கட்டுமானங்களைத் திரும்ப அமைக்கவும்

- வழிசெய்யும் விதத்தில் பல்வேறு உதவிகளை வழங்கவும் சர்வதேச சமூகம் விரைந்து முன்வந்திருக்கின்றது.

'சுனாமி' ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்றோருக்கான அவசர மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் சர்வதேச ரீதியில் முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகின்றன. உலக வரலாற்றில் மிகப்பெரிய நிவாரண நடவடிக்கை இது என்று சர்வதேச செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன. இந்த நடவடிக்கைக்கு சர்வதேச ரீதியில் எதிர்பார்த்ததையும் விட அதிகளவிலும், அதிக வேகத்திலும் வரவேற்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சர்வதேச சமூகம் இவ்வளவு விரைவாக முழித்துக்கொண்டு சுறுசுறுப்பாக - தாராளப் போக்கோடு - உதவ முன்வந்திருப்பதை ஐ.நா.முகவர் அமைப்புகள் கூட ஆச்சரியத்தோடும், நம்பமுடியாத தன்மையோடும் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை மக்களின் தனிச் சொத்துக்கள், வீடு - வாசல்கள், உடைமைகள் அழிந்தமை ஒருபுறமிருக்க, பொது - சமூக - கட்டமைப்புகளும் நாசமாகியிருக்கின்றன.

வீதிகள், பாலங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், தொலைத் தொடர்பு வசதிகள், குடிதண்ணீர் விநியோகம், வடிகாலமைப்பு வழிகள் என்பன உட்படப் பல்வேறு கட்டுமானங்கள் மீள அமைக்கப்பட வேண்டியுள்ளன. பல்வேறு அத்தியாவசிய சேவைகள் மீள ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளன.

இந்த அனர்த்தச் சேதங்களைத் தனி ஆள்கள் மற்றும் குடும்பங்களின் இழப்புகள் என்ற வகையிலும், பொது இழப்புகள் என்ற வகையிலும் ஆராய்ந்து நிவாரணங்களையும், உதவிகளையும், இழப்பீடுகளையும் வழங்க வேண்டியிருப்பது முக்கிய விடயமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை இந்த மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு பல்வேறு நாடுகள் நிதியாகவும், பொருளாகவும் உதவ முன்வந்திருக்கின்றன.

பலநாடுகள் அவற்றை அனுப்பத் தொடங்கிவிட்டன. சில நாடுகள் இந்தக் கட்டுமானப் பணிகளை நேரடியாகச் செய்வதற்காக வல்லுநர்கள் அடங்கிய தமது அணிகளை ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பிவிட்டன.

ஆனால், இந்த வசதிகளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குக் கிட்டச் செய்வது தொடர்பான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை; இணக்கப்பாடுகள் ஏதும் இன்னும் எட்டப்படவில்லை.

ஐ.நா.முகவர் அமைப்புக்கள் போன்றவையும் வேறு சில நாடுகளும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் - இலங்கையின் ஏனைய பிரதேசங்கள் போன்று - நிவாரணம் மற்றும் மீள்கட்டமைப்புப் பணிகளில் ஈடுபடுகின்றன; எதிர்காலத்திலும் ஈடுபடும்.

ஆனால், இந்த நிவாரணம், மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு, பணி ஆற்றுகின்ற - ஆற்றப்போகின்ற - பிராந்திய வல்லரசு நாடான இந்தியா, சர்வதேச வல்லாதிக்க நாடான அமெரிக்கா போன்றவை தமது ஆளணி மற்றும் செயற்பாடுகளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் மனிதாபிமானப்பணிகள்வரை விஸ்தரிக்குமா என்பது கேள்விக்குறியே. அந்த நாடுகளினதும், அரசுகளினதும் அரசியல் நிலைப்பாடுகள் அப்படிச் செயற்படுவதற்குத் தடையாகவும், இடைஞ்சலாகவும் அமையும் என்பது கண்கூடு.

எனவே, இத்தகைய நாடுகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமது பணிகளை நேரடியாக மேற்கொள்ளாவிட்டாலும் அந்தப் பிரதேச மக்களுக்கு அவை வேறு வழிகளில் உரிய உதவிகளை வழங்க முடியும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை மீள் கட்டமைப்புக்கு ஆளணிப் பற்றாக்குறை முக்கிய விடயமல்ல. தேர்ந்த - துறைசார் - வல்லுநர்களினதும், நிபுணர்களினதும் பற்றாக்குறை இக்கட்டைத் தரலாம். ஆனால், வேலையை நிறைவேற்றுவதற்கான மனித வலுக்கனம் புலிகளின் பிரதேசத்தில் நிறையவே உண்டு.

போதிய நிதி வசதி, கருவிகள் - உபகரணங்கள், மூலப்பொருள்கள் போன்றவற்றுக்கே அங்கு பெரும் நெருக்கடியும், தட்டுப்பாடும் உள்ளன.

எனவே, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளுக்குத் தங்களின் ஆளணியை நேரில் அனுப்பிவைக்க முடியாமல் - தமக்குத் தாமே - கட்டுப்பாடு விதித்துள்ள நாடுகள், வேறு வழியில் அந்த மக்களுக்கு உதவ முடியும். அவை அந்த வழிகளில் கவனம் செலுத்துவது நல்லது. இல்லையேல், தமிழ்ப் பிரதேசங்களைப் புறக்கணித்துப் பாரபட்சம் காட்டும் நாடுகள் என்ற பெயரையே அவை சம்பாதிக்கும். இது விடயத்தில் அவை அவதானமாகச் செயற்படவேண்டும் - பாரபட்சமின்றி உதவவேண்டும் - என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும்.

## மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைப்பேன்!

# அரச ஊழியர்கள் வருடா வருடம் உறுதியுரை எடுப்பது அவசியம்

யாழ்ப்பாணம்.ஜன.6

புதிதாக உதயமாகியுள்ள இந்த 2005 ஆம் ஆண்டில் அரசசேவையில் உள்ளவர்கள் இனிமேல் வருடாவருடம் தமது சேவையினைப் புதிய ஆண்டில் தொடங்கும் போது நாட்டு மக்களுக்கான மகத்தான சேவையினை அல்லும் பகலும் அயராது அர்ப்பணிப்புடன் செய்வேன் என்று உறுதியுரை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரச உத்தியோகத்தர்களுக்குப் பணித்துள்ளார்.

இவர்களுக்கான உறுதியுரைப் பத்திரத்தின் விவரம் வருமாறு:-

நான் பொதுமக்களின் ஓர் ஊழியனாவேன். பொதுமக்களிடம் இருந்து நான் சம்பளம் பெறுவதனால் அவர்களுக்குச் சிறந்ததொரு சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு என்னை அர்ப்பணித்துள்ளேன்.

எனது நாட்டை சுபீட்சப்பாதையில் இட்டுச்செல்வதற்கும் எனது சகோதர நாட்டு மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்கும் எனது உச்சப் பங்களிப்பை நல்குவதற்கு நான் உறுதி பூணுகின்றேன்.

இந்த உறுதிமொழியை, நிறைவேற்றும் நோக்கில் எட்டுவகை விதிமுறைகளைப் பின்பற்றுகின்றேன்.

★ இன்று செய்ய வேண்டிய பணியை இன்றே நிறைவேற்றுவேன். நாளைக்கென காலம் தாழ்த்தமாட்டேன்.

★ பொதுமக்களை நட்புறவுடன் வரவேற்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொடுக்க முற்படுவேன்.

★ அரச சேவையில் காணப்படும் சட்டங்களுக்கும் உடன்பாடுகளுக்கும் இணங்க பணியாற்றுவதற்கு அர்ப்பணிப்பேன். அவ்வாறாயினும், வெறுமனே விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதை விடவும் எனது சேவையின் மூலம் எதிர்பார்க்கப்படும் பலனைப் பெற்றுக் கொடுப்பதை மேலானதாகக் கருதுவேன்.

★ அரச பதவிகளை அல்லது அரச வளங்களை முறைகேடாகவோ அல்லது தனிப்பட்ட இலாபம் கருதியோ பயன்படுத்தப்படுவதை விட்டு விலகி இருப்பேன். பொதுமக்களின் உடைமைகளையும் அரசின் சொத்துக்களையும் பாதுகாப்பதையும் கவனமாகப் பயன்படுத்துவதையும் எனது முக்கிய கடமையாகக் கருதுவேன்.

★ மனச்சாட்சிக்கு உடன்பட்டு அரசின் கொள்கைகளுக்கு இணங்க சரியானவற்றை மட்டும் நிறைவேற்றுவேன்.

★ ஆள்களின் அந்தஸ்தினைப் பொருட்படுத்தாமல் நடுநிலையாகச் செயலாற்றுவேன்.

★ அலுவலகத்தினுள்ளும், அதற்கு வெளியிலும் அரச சேவையின் கௌரவத்தைப் பாதுகாக்கக்கூடிய விதத்தில் பேசுவேன். செயலாற்றுவேன், நடந்து கொள்வேன்.

★ என்னிடம் எதிர்பார்க்கப்படும் அரச சேவையை வினைத்திறனாக நிறைவேற்றும் பொருட்டு எனது சகோதர உத்தியோகத்தர்களுடன் ஒற்றுமையாக கூட்டுணர்வுடன் இணைந்து செயலாற்றுவேன்.

- என்பதே அந்த உறுதி மொழியாகும். (4-13)

# இலங்கை வங்கிக்கிளையை மீண்டும் ஊர்காவற்றுறைக்கு மாற்றுக!

## வர்த்தகர் சங்கம் கோரிக்கை

ஊர்காவற்றுறை.ஜன.6

தற்போது வேலணையில் இயங்கி வரும் ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையை மீண்டும் ஊர்காவற்றுறையில் இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை வர்த்தகர் சங்கம் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஊர்காவற்றுறையில் இருந்து 1990 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த அரச செயலகங்களும் பொது அமைப்புக்களும் மீண்டும் தமது பழைய இடங்களில் செயலாற்றி வருகின்றன.

எனினும், ஊர்காவற்றுறையில் செயற்பட்டு வந்த இலங்கை வங்கிக் கிளை மட்டும் வேலணையில் செயலாற்றி வருகிறது. அதுமட்டுமன்றி பல்வேறு இடங்களிலும் இலங்கை வங்கி விரிவாக்கல் கிளைகள் தற்போது நிறுவப்பட்டு வருகிறது.

எனவே, வேலணையில் செயற்பட்டு வரும் ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையை மீண்டும் ஊர்காவற்றுறையில் திறக்கமுடியாதுவிடின் ஒரு விரிவாக்கல் கிளையையாவது இங்கு திறப்பதன் மூலம் ஊர்காவற்றுறை இலங்கை வங்கி வாடிக்கையாளரது தேவைகளை நிறைவேற்ற முன்வருதல் வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4-16)



யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினர் கடந்த திங்கட்கிழமை புலோலியில் உள்ள பாடசாலையொன்றில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு சத்துணவு, குழந்தைகளுக்கான பாலூட்டல் உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். (8)

## யாழ்.வைத்தியசாலைக்கு இரத்ததானம்

தென்மராட்சி.ஜன.6

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயப்பகுதி இளைஞர், யுவதிகள் அண்மையில் இரத்ததானம் வழங்கினர்.

தேவாலய பங்குத்தந்தை அருட்திரு. இரவிச்சந்திரன் அடிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி மருத்துவர்கள் கலந்துகொண்டனர்.

தேவாலய இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த 32 இளைஞர், யுவதிகள் இரத்த தானம் செய்தனர். (8-117)

## இயற்கை அனர்த்தத்தால்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,511 குடும்பங்கள் இடம்பெயர்வு

பரந்தன்.ஜன.6

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 511 குடும்பங்களைச்சேர்ந்த 9 ஆயிரத்து 256 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கள்ளப்பாட்டில் 485 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 572 பேரும், சிலாவத்தையில் இருந்து 380 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 517 பேரும், வண்ணாங்குளத்தில் இருந்து 235 குடும்பங்களைச் சேர்ந்த 493 பேரும், செல்வபுரத்தில் 136 குடும்பங்களைச் சேர்ந்த 571 பேரும், முல்லைத்தீவில் 373 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 369 பேரும்-

செம்மலையில் இருந்த 806 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 60பேரும், அளம்பிலில் 123 குடும்பங்களைச் சேர்ந்த 675 பேரும் இடம்பெயர்ந்துள்ளதாக அவசரகால செயலணிக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-352-202)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியோருக்கு அபராதம்

தென்மராட்சி.ஜன.6

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த ஆறு வாகனச்சாரதிகளுக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் கடந்த 3 ஆம் திகதி பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு நீதிவான் மேற்கண்டவாறு அபராதம் விதித்தார்.

மூன்று பாரவூர்திகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதமும், மூன்று உழவு இயந்திரங்களுக்கு தலா 5 ஆயிரம் வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது. (8-117)

## உதயவாக்கு

*இன்பத்தோடு கலந்து வரும் துன்பங்களைக் களைந்தெடுக்கக் கூடிய வலிமையான உள்ளத்தைப் பெறுவதே நல்லது.*

## நாளை

*மார்கழி 23*
*வெள்ளிக்கிழமை*
*(07.01.2005)*
திதி : *துவாதசி*
*பின்னிரவு 1.11 வரை*
நட்சத்திரம் : *அனுஷம்*
*முன்னிரவு 11.35 வரை*
சுபநேரம் :06.32 - *08.02*
ராகுகாலம்: *11.02 - 12.32*
*(யாவும் பழைய நேரப்படி)*

# கீழ் உழைப்பு பட்டதாரிகள் அரசாங்கம் மீது அதிருப்தி

ஊர்காவற்றுறை.ஜன.6

தற்பொழுது அரச துறையில் கடமையாற்றிவரும் கீழ் உழைப்பு பட்டதாரிகள் தமக்கு அரசு அநீதி இழைத்து விட்டதாக தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

பட்டதாரி பயிலுநர்களுக்கு அரச துறையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்போது தங்களையும் இணைத்துக்கொள்வதாக அரசு வாக்குறுதியளித்திருந்ததாகவும்-

எனினும், தற்பொழுது வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தில் தாங்கள் உள்ளீர்க்கப்படவில்லை எனவும் அவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக தாங்கள் விரைவில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர். என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இல 2/93 அரசினால் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படவில்லையெனவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (4 -16)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

இசுசு ELF 350 (NKR MODEL) 43...... இலக்க வெள்ளைநிற ELF விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: க.புவனேந்திரன் C/o: பூமணி (ரீச்சர்), வேம்போலை வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். (40479)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 38/1, சோமசுந்தரம் அவன்யூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 5964, 021 - 222 3853 (40448)

## வாடகைக்கு

இல.43, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பான சூழலில் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: து.அருள், தொ.பேசி 077 6138250. (40451)

## அறை வாடகைக்கு

பல்கலைக்கழக மாணவிகள், அரசதுறையில் கடமைபுரியும் பெண்கள் இருவர் தங்கியிருப்பதற்குரிய அறை பொஸ்கோ பாடசாலைச் சூழலில் வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 6162991. (40481)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 08-01-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 021 - 222 3529, 222 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (40393)

## தவறிவிட்டது

இல.59, மாட்டின் வீதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் இராமலக்சுமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வன்னி நிரந்தர வதிவுப் பத்திரம் அடங்கிய கைப்பை 02-01-2005இல் ஆஸ்பத்திரி வீதிக்கும் மாட்டின் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (40482)

## நியூ றோயல் அக்கடமி

சங்கத்தானை

**A/L 2007**

கலை, வர்த்தகப் பிரிவு
தவிர்க்கமுடியாத காரணத்தால்
08-01-2005 சனி
காலை 9.00 மணிக்கு நடைபெறும்.
(40487) - இயக்குநர்.

## கணக்காளர் தேவை

எமது நிறுவனத்துக்கு கணக்கியல் கற்ற (வயது 22 - 55) கணக்கியலாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வாகன உதிரிப்பாகங்கள் பற்றிய முன்னனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விளம்பர இல.2465,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(40555) (-24-14-19-42)

# அகதி முகாம்களில் மலசல கூடங்கள் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வடமராட்சிப் பிரதேசத்திலும், தென்மராட்சிப் பிரதேசத்திலுமுள்ள முகாம்களில் தங்கியிருக்கின்ற மக்களுக்கு 32தற்காலிக மலசலகூடங்களை வடபிராந்திய நிர்மாணிகள் சங்கத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு உதவுவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் வடபிராந்திய நிர்மாணிகள் சங்கப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (8-203)

# முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.6

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து ஊழியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4)

# கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.6

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம இயற்கை அனர்த்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் சங்கத்தலைவர் க.இராஜசந்திரன் தெரிவித்துள்ளார். (8-203)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண் மகிழ 21 - 11 - 1929



கண் நெகிழ 07 - 12 - 2004

### கந்தையா கதிர்காமத்தம்பி

அன்பும் பாசமும் காட்டி என்னை
வளர்த்து ஆளாக்கிய தெய்வமே!
ஈரவிழிகள் எப்போதும் வேண்டி
நிற்கின்றது உந்தன் ஓவிய முகம்!
உணர்வுக்குள் உறைந்திருக்கும் குலவிளக்கே!
இல்லாளை நீர் இழந்து தவித்தபோதும்
ஈன்றெடுத்த தாயை நான் இழந்து துடித்தபோதும்
பற்றுடன் எனக்குப் பாசமழை பொழிந்தீரே!
இப்போது என்னைத் தனிமையில் பரிதவிக்கவிட்டு
விட்டு எங்குதான் சென்றீரோ?
மாளாத துயர் தன்னில் நானிங்கு வாடுகின்றேன்!

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பன இன்று (06.01.2005) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மகள் திருமதி பாமினி கிருபானந்தா (யா.தே.க.க.)
அன்பு மருமகன் திரு.சி.கிருபானந்தா (B.Sc. Agri. Eng.)
அன்புச் சகோதரர்கள்.

231, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி,
நல்லூர். (40485)(24-14-19-42)

## நியூ சயன்ஸ் அக்கடமி

நெல்லியடி

O/L பரீட்சையில்
தோற்றியவர்களுக்கு விசேட வகுப்பு
**Spoken English**
**with Grammar**
ஆசிரியர் By: நிஷாந்தன்
ஆரம்பம்: 07-01-2005 வெள்ளி காலை 8 மணி
(40445)(26-14-19-42)

## ஆடுகள் திருட்டு

தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த மூன்று ஆடுகளை ஓட்டோவில் வநதோர் அபகரித்துச் சென்ற சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. ஈவினை மஸ்கன வீதியில் உள்ள தோட்டமொன்றிலே கட்டப்பட்டிருந்த ஆடுகளே இரவு வேளையில் ஓட்டோவில அபகரித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தோட்டத்திற்கு அருகில் குடியிருப்போர் இரவுவேளையில் ஓட்டோவின் சத்தத்தையும் பின்னர் ஆடுகள் கத்தும் சத்தத்தையும் கேட்டுஓடிவந்தபோது ஓட்டோ அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-69)

## மாபெரும் மலிவு விற்பனை

யாழ். நகரின் எந்தமூலை முடுக்கிலும் எமது விலைகளில் கிடைப்பதில்லை.

| | | |
|---|---|---|
| கிலிட்டர் - 120/- | சண்பிளவர் கிட் - 355/- | எம்போஸ் பிறின்ட், பேர்ள் பிறின்ட், குளொஸ் பிறின்ட், |
| திரட் நூல் - 175/- | டெய்சி கிட் - 245/- | பொயில் பேப்பர், லெமினேசன் குரூ, தூரிகைகள், |
| பப்ரிக் குளூ - 60/- | லிலக் கிட் - 145/- | கோல்ட் சில்வர் டஸ்ட், வோட்டர் கலர், அக்ரலிக் கலர், |
| கிளாஸ் பெயின்ட் - 265/ | ரெக்ஸ் மீடியம - 55/- | ஓயில் கலர் வகைகள், கன்வஸ் இன்னும் பல.... |

கே.கே.எஸ். வீதி, இணுவில் (40475)(24-14-19-42)

**இமேஜ் ஆட் சென்றர்**

## வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்கான விசேட சலுகை

எங்கிருந்தும் அழைப்புகளை மேற்கொள்ள

5/= மட்டுமே

இந்தியா 20.00

மேலும் தொடர்ச்சியான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கான எமது அங்கத்துவ அட்டையினைப் பெற்றுக்கொள்ளுங்கள். (இலவசம்)

**திருமுருகன் கொம்னெற்**

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

# திருவாசக முற்றோதல்

கொழும்புத்துறை,ஜன.6

கொழும்புத்துறை உப்புக்குளம் ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திரசேகரர் விநாயகர் திருக்கோயிலில் எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை விநாயகர் சதுர்த்தி விரத தினத்தன்று காலை 7.30 மணிக்கு ஆலய பரிபாலன சபையின் தலைவரும், இளைப்பாறிய அதிபருமான தம்பு தியாகராசா தலைமையில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடைபெறும்.

காலை 6 மணிக்கு ஆலய சகல மூலமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகம், அலங்கார தீபாராதனைகள், பூசை, ஆராதனை வழிபாடுகளை அடுத்து விசேட வசந்த மண்டபப் பூசை, ஆராதனை வழிபாடுகளை அடுத்து பஞ்சபுராணம் ஓதுவதும் பின்னர் திருவாசகம் முற்றோதலும் ஆரம்பமாகி இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு வளர்பிறை சதுர்த்தி விரதத் திருவிழா ஆரம்பமாகும்.

மாலை 5.30 மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி அலங்கார தீபாராதனைகள், பூசை, ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்று பின் பஞ்சபுராணம் ஓதுவதும் இடம்பெறும். அடுத்து விநாயகப் பெருமான் எலி வாகனத்தில் எழுந்தருளி உள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு திருவருள்பாலிப்பார். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக அன்பு நண்பன்

### செல்வன் கருணாநிதி கஜன

அவர்கள் 04.01.2005 அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்தித்து, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம். (40484)(39-14-19-42)

-98 உயர்தரப்பிரிவு
பழைய மாணவர்கள்.

## D.C.M.

வணிக, முகாமைத்துவப் பட்டப்படிப்புக் கல்லூரி

**A/L - 2007**

கலை வர்த்தகம்
ஆரம்பம்:
09 ஜனவரி 2005 - ஞாயிறு காலை 8.00 மணி

பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பாலவாசன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
தமிழ் - நாக.தமிழிந்திரன்
இந்துநாகரீகம் - ஸ்ரீஸ்
அளவையியல் - சுதன்
புவியியல் - குமரன்
ஆங்கிலம் - நிஷாந்தன்

## யாழ். சிகை ஒப்பனையாளர் சங்கம் யாழ். கிளை 01

### அறிவித்தல்

சுனாமியின் கொடூர அனர்த்தத்திற்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்ட எங்கள் அன்பின் சகோதரர்களுக்கு உதவி செய்யும் முகமாக எங்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் நாளை (07.01.2005) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு அனைத்துக் கடைகளையும் மூடி சங்கப் பணிமனைக்கு வருகைதருமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு: 09.01.2005 ஞாயிற்றுக்கிழமை கடைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம். நிர்வாகம்
(40467)(24-14-19-42) யாழ்.சிகை ஒப்பனையாளர் சங்கம்.

## தேவை

எனது வைத்தியசாலைக்குக் கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

I. தாதிகள்
II. பயிலுநர் தாதிகள்
III. வரவேற்பாளர்
IV. மருந்தாளர் (அனுபவம் உள்ளவர்கள், பயிலுநர்கள்)

குறிப்பு: I.அனுபவம் உள்ளவர்களுக்கு தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.
II.சுய விவரங்களுடன் நேரில்வரவும்.

இடம்: யாழ்.வைத்தியசாலை, 284, பலாலி வீதி, கந்தர்மடம்.
காலம்:இன்று (06.01.2005) வியாழக்கிழமை.
நேரம்: மாலை 3 மணி - மாலை 5 மணிவரை. (40471)(42-14-19)

# பொதுஎழுதுநர் சேவையில் உள்ளோரை சிறப்பு வகுப்புக்கு நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.6

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ உள்ள அலுவலகங்களில் பொது எழுதுநர் சேவையின் வகுப்பு I இல் கடமைபுரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், தம்மை மாகாண சபையில் வெற்றிடங்களாக வுள்ள அதிசிறப்பு வகுப்பிற்கு மூப்பின் அடிப்படையில் நியமிக்கக் கோரி வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

"2003 மார்ச் மாதம் 25 ஆம் திகதி நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க மாகாண பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்பின் 2001ஆம் வருட வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது அறிய வந்துள்ளது.

அதன் பிரகாரம் முன்னர் மாகாண அரச சேவையில் கடமையாற்றி அவர்களது விருப்புரிமையின் பேரில் மாகாண அரச சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்போது மத்திய அரச சேவையின் கீழ் உள்ள மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பொது எழுதுநர் சேவை வகுப்பு I இன் எழுதுநர்கள் பலரிடமிருந்து அதிசிறப்பு வகுப்பிற்கு பதவியுயர்வு வழங்குவதற்காக மீண்டும் மாகாண அரச சேவையில் உள்ளீர்ப்பதற்கான விருப்புரிமையை வழங்கும்படி மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் 15.03.2000 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் சகல பிரதேச செயலாளர்களுக்கும் முகவரியிடப்பட்டு மாகாண சபையின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் ஏனைய திணைக்களத் தலைவர்களுக்கும் பிரதியிடப்பட்ட 15.12.1999 ஆம் திகதிய 99/07 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03ஆம் பந்தியில் மாகாண சபையில் இருந்து மத்திய அரச சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்புரிமை தெரிவித்த அலுவலர்கள் பின்னர் எக்காரணம் கொண்டும் மீளப் பெறமுடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கையானது 15.12.1999 ஆம் திகதிய பிரதேச நிருவாக சுற்றறிக்கை 99/07 விதிகளுக்கு முரணானதும் சட்ட ரீதியற்றதும் முறையற்றதுமாகும்.

தற்போது மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் தமது விருப்புரிமையை தெரிவித்து மத்திய அரச சேவையில் இணைந்த மாகாண அரச சேவை அலுவலர்கள் மத்திய அரச சேவையில் சேருமாறு பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் காலத்துக்கு காலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் அவர்களிடமிருந்து கட்டாய விருப்புரிமை கோரப்படவில்லை என்பது சுற்றறிக்கைகளைப் பார்க்கும்போது தெளிவாகப் புலப்படும்.

அவ்வாறிருக்கும்போது தங்களது சொந்த நலன்களையிட்டு, விருப்புரிமை தெரிவித்து, மாகாண அரச சேவையிலிருந்து விடுபட்டு, மத்திய அரசசேவையில் சேர்ந்து கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவ்வலுவலர்களுக்கு அதிசிறப்பு வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக நடவடிக்கை எடுப்பதால் வடக்கு - கிழகு மாகாண சபையில் ஆரம்ப காலம் தொடக்கம் கடமையாற்றும் நாங்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளோம்.

எனவே, தங்களது முடிவினை மறுபரிசீலனை செய்து பாதிக்கப்பட்ட எங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு மிகவும் வினயத்துடன் தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்" என்று அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-75)

## இலங்கையை மீளக் கட்டியெழுப்ப அமெரிக்கா முழுமையாக ஆதரவுதரும்

கொழும்பு.ஜன.6

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் பணிகளுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்குமென்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ, புஷ் அறிவித்திருக்கிறார்.

கடந்த திங்கட்கிழமை வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்குச் சென்ற ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அங்கு இலங்கைக்கான தூதுவர் தேவிந்த சுபசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். பின்னர் அங்குள்ள அனுதாபப் புத்தகத்திலும் புஷ் கையொப்பமிட்டார்.

இலங்கையின் அனர்த்த நிலைமைகள் குறிதது விரிவாகக் கேட்டறிந்த அமெரிக்க ஜனாதிபதி, தேவைப்படும் மேலதிக உதவிகளைக் கோருமாறும் தெரிவித்திருக்கிறார் எனக் கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனும் வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்குச் சென்று தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார். (க-3)

## சுனாமியால் அநாதைகளான குழந்தைகளில் 20 பேரைத் தத்தெடுக்கிறது ம.ம.முன்னணி

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் அநாதைகளாக்கப்பட்டுள்ள குழந்தைகளில் 20 குழந்தைகளைத் தத்தெடுத்து அவர்களுக்கான முழுச்செலவுகளையும், பொறுப்பையும் மலையக மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளும். இதற்கான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் எனக்கூறினார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நுவரெலியா மாவட்ட எம்.பியுமான பெ.சந்திரசேகரன்.

சுனாமி அனர்த்தங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

அனர்த்தங்களைப்பற்றிப் பேசுவதினாலோ, இடம்பெற்ற பரிதாபகரமான சம்பவங்களைப் பற்றி விவரிப்பதினாலோ துயரம் நீங்கப் போவதில்லை. மக்கள் அகதி முகாம்களில் தொடர்ந்தும் அகதிகளாகவே இருக்கக்கூடாது. தற்காலிக குடியிருப்புக்கள் அவர்களுக்கு அவசியமில்லை.

தேசிய ரீதியாகத் திட்டமிடப்பட்ட உறுதியான வீடமைப்புத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அங்கு அவர்கள் நிரந்தரமாக குடியமர்த்தப்பட வேண்டும்.

இன்று அவர்கள் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்றனர். ஆரம்பத்தில் இருந்தே சகல விதமான உட்கட்டமைப்புக்களும் பாரபட்சமின்றி அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

வெளிநாட்டு உதவிகள் தேவையான அளவு கிடைத்துள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றார். பொருள்கள் கிடைத்துவிட்டால் மட்டும் போதாது. அந்த உதவிகள் உரியவர்களுக்கு சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதனை உதவி வழங்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மலையக மக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் பெரும் உதவிகளை வழங்கியுள்ளன.

மலையக மக்கள் முன்னணியின் நிவாரணபணிகளுக்கு உதவிக்கரம் வழங்கிய வர்த்தகப் பிரமுகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தப்பேரழிவினால் பல ஆயிரம் குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 20 குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம் என சந்திரசேகரன் எம்.பி.கூறினார். (க-3)

## பிளவுபடுகிறது இ.தொ.கா.!

கொழும்பு,ஜன.6

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்குள் பிளவு ஏற்பட்டுவிட்டது என்று தெரிகிறது. அதன சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கட்சியை விட்டு வெளியேறுகின்றனர். முதற்கட்டமாக இ.தொ.காவின் கேந்திர பிரதேசமாகக் கருதப்பட்ட மத்திய மாகாணத்தின் பிரதான அமைப்பாளர் கே.கோவிந்தராஜ் மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து கொண்டார். மேலும பல உயர்மட்ட உறுப்பினர்களும் இணையவுள்ளனர் என்று கூறப்படுகிறது.

அடிமட்ட உறுப்பினர்களினதோ அல்லது பிராந்திய அமைப்பாளர்களினதோ ஆலோசனையின்றி இ.தொ.கா.அரசுடன் இணைந்து கொண்டதும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவின் விடுதலைகோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இ.தொ.கா. அசட்டையாக நடந்து கொணடதுமே இ.தொ.காவில் ஏற்பட்ட பிளவுக்கு காரணமென நம்பப்படுகிறது.

கட்சியின் தலைமைப்பீடம் அதன் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆலோசனைகளை செவிமடுக்க மறுப்பதே இந்தப் பிளவுக்கு காரணம் எனத் தெரியவருகிறது. விரைவில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் மலையக மக்கள் முன்னணியில் இணையவுள்ளனர். மத்திய மாகாணத்தில் அமைச்சராக பதவிவகித்த ஒருவரும் இந்தப் பட்டியலில் அடங்குகிறார் என நம்பகமான வட்டாரங்கள் மூலம் தெரிய வந்தது. (க-3)

## மாவை எம்.பி. மருந்துகள் கையளித்தார்

குடத்தனை,ஜன.6

இயறகை அனர்த்தத்தினால் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் நோயாளர்களின் நன்மை கருதி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஒரு தொகுதி மருந்துவகைகளை மந்திகை மருத்துவமனைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த மருந்துப் பொருள்களை மந்திகை மருத்துவமனைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை பெற்றுக் கொண்டார். (8-78)

## சடலம் மீட்பு

குடத்தனை,ஜன.6

தும்பளை கிழக்குப் பகுதியில் இயற்கை அனர்தத்தால் இறந்த வயோதிப மாது ஒருவரின் சடலம் கடந்த 2ஆம் திகதி மீட்கப்பட்டது.

இந்தச் சடலம் அப்பகுதியைச் சேர்ந்த மயில்வாகனம் இராஜேஸ்வரி (வயது 52) என உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டதைத் தொடர்ந்து சடலம் அப்பகுதியில் புதைகப்பட்டது. (8-78)

## மாதகலில் சுனாமி தாண்டவம் ஆடியதன் விளைவுகள்....



சுனாமி இயற்கை அனர்த்தால மாதகல் மீனவர்களன் படகுகள், கட்டுமரங்கள், வலைகள் என்பன முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதை படங்களில் காணலாம்.
(படம்:அ.அருண், மாதகல செய்தியாளர்)

## முக்கிய அறிவித்தல்

யாழ்.மாவட்டத்தில் மேசன்தொழில், தச்சுத்தொழில் செய்வோரை ஒழுங்குபடுத்தும் முகமாக எமது சங்கம் பதிவுகளை மேற்கொண்டு கூலியை வரையறை செய்ய முடிவுசெய்துள்ளது.

ஆகவே, மேசன், தச்சுத் தொழிலை மேற்கொள்வோர் இன்று 06-01-2005 தொடக்கம் 29-01-2005 வரைக்குள் தமது பெயர், விவரங்களை மேற்படி சங்கத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். *விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

வடக்கு கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,
யாழ்.மாவட்ட செயலகம்,
14A, அன்னசத்திரலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். ☎021 222 7919

(40456) (26-14-15)

---

பருத்தித்துறை பனை. தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்க நலன்புரி

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு (24-12-2004) முடிவு**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 6229 |
| இரண்டாம் பரிசு | 0136 |
| மூன்றாம் பரிசு | 5689 |
| நான்காம் பரிசு | 6608 |
| ஐந்தாம் பரிசு | 1689 |

ஆறுதல் பரிசில்கள்:
3407, 8959, 6955, 2436, 3660, 1930, 1368, 4182, 9196, 6241.

கடல் அனர்த்தங்களால் உரியநேரத்தில் முடிவுகளை வெளியிடாமைக்காக வருந்துகின்றோம்.

- நிர்வாகசபை.

(சி-40233) (26-14-15)

---

# கேள்வி கோரல்

வீடமைப்பு நிர்மாணத்துறை, கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு

## கட்டடங்கள் திணைக்களம்

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அழகியற்கலை இராமநாதன் அக்கடமியில் கட்டம் II பாகம் II நிர்மாண வேலைகளுக்கான சீலிடப்பட்ட கேள்விகள் கட்டடங்கள் திணைக்களம் கேள்விச்சபைத் தலைவரால் 2005-01-20 மு.ப.10 மணி வரை கோரப்படுகின்றன.
மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரத்தை (1,000) மட்டும் *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்)* 2005-01-13 வரை பெறப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.
2. தகைமையுடைய கேள்விதாரர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் விருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் தரம் எம் 5 மற்றும் அதற்குமேல் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களாகப் பதிவுசெய்துகொண்ட மற்றும் இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்க அங்கத்தவராயுமுள்ள கேள்விதாரராயிருத்தல் வேண்டும். கேள்வி ஆவனங்களைப் பெறுமுன் ஒப்பந்தகாரர்களின் பதிவுப் புத்தகம் NCASL அங்கத்துவ அட்டை எனபவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்களை *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் (யாழ்பபாணம)* இலவசமாகப் பரீட்சிக்கலாம்.
4. கேள்வி மூடப்பட்ட திகதியிலிருந்து 90 நாள்களுக்கு கேள்வி செல்லுபடியானதாயிருத்தல் வேண்டும்.
5. கேள்விகள் முந்நூறாயிரம் ரூபா (300,000.00) பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. சீலிடப்பட்ட கேள்விகள் மூடப்படும் நேரத்திற்கு முன் கிடைக்கக்கூடியதாய் *பத்திரமுல்ல, 'செத்சிரிபாய', கட்டடங்கள் திணைக்களம், கேள்விச் சபைத் தலைவருக்குப்* பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரில் கையளிக்கப்படல் வேண்டும்.
7. மூடபபடடவுடன் கேள்விகள் உடனடியாக *பத்திரமுல்ல, 'செத்சிரிபாய', 2 ஆவது மாடி, கட்டடங்கள் திணைக்களம* ஒப்பந்தங்கள் பிரிவில திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
8. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படாதாகையால் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு, கேள்வி மூடப்படும் நேரத்திற்கு 01 மணி நேரம் முன்னதாகக் கேள்விதாரர் 'செத்சிரிபாய' வளவுக்குள் பிரவேசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
9. மேலதிக விவரங்களுக்குத் தயவுசெய்து *யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம)* அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

டபிள்யூ.எஸ்.மொல்லிகொட,
கட்டடங்கள் பணிப்பாளர். கட்டடங்கள் திணைக்களம்.
'செத்சிரிபாய',
ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டே. பத்தரமுல்ல.
www.buildings.gov.lk

(சி-40230) (26-14-15)

---

## தேவை

பெயின்ற் விற்பனைப் பிரதிநிதியும் (ஆண்) D.S.R
A/L கணக்கியல் தேர்ச்சி பெற்றவர்களும் தேவை.

**சிவா பிறதேர்ஸ்,**
**246, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(40464)

---

## சமையல் ஆள் தேவை

பிரபலமான குளிர்பான நிலையம் ஒன்றிற்கு அனுபவமும், திறமையும் உள்ள சிற்றுண்டிகள் தயாரிப்பாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
T.P. 0776 - 176726

(சி-40453)

---

## வீட்டுக்கு தீவைப்பு

தொல்புரம்,ஜன.6

அண்மையில் தொல்புரம் பகுதியிலுள்ள வீடொன்று நள்ளிரவு வேளையில் விசமிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த கிரவிசந்திரன் என்பவரின் வீடே தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீட்டிலிருந்தவர்களின் கூக்குரலையடுத்து அயலவர்களால் தீ அணைக்கப்பட்டதால் வீட்டிலிருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். (8-ரி-202)

---

## விக்னா

கல்வி நிறுவனம்

**O/L DAY CLASS**
(8.30 - 2.30)
ஆரம்பம்:
10-01-2005
தரம் 6 தொடக்கம்
**O/L EVENING CLASS**
பிரிவு 2 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(சி-40209)

---

## வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*பொதுக்கலைமாணி தேர்வு பகுதி – II 2001 (வெளிவாரி)*
*செய்முறைப் பரீட்சை (DTAG. 3.2 நாடகமும் அரங்கியலும்)*

மேற்படி தேர்வுக்கான செய்முறைப் பரீட்சை 24-01-2005 ஆம் திகதி தொடக்கம் நுண்கலைத்துறை கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சை அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவில் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு:* செய்முறைப் பரீட்சை முடிவடைந்ததும் பரீட்சை அனுமதி அட்டையை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
04-01-2005

(சி-40239) (26-14-15)

---

# Institute of Business Management Studies (IBMS)

**Head Office:**
# 410, K.K.S.Road,
Jaffna.

**Branches:**
- NMMV Road, Nelliady.
- Sangaththanai, Chavakachcheri.

**New Batches Start on:**
Batch I - 09.01.2005
Batch II - 10.01.2005
Batch III - 23.01.2005
At 10.00 A.M.

**Diploma Courses**

- Diploma in Microsoft Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Engineering
- Diploma in Java Programming
- Diploma in VB Programming

**Certificate in Information Technology**

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேட கற்கை நெறி
காலம் : 2 மாதங்கள்
அனைத்துக் கட்டணங்களும் உள்ளடங்கலாக 2000/- மட்டுமே

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பிரிவில் Accounting Packages உம் இடம்பெற இருக்கின்றன.

---

## MATHS CENTRE

**M.M.V.Road - Nelliady**

**A/L - 2007 கலைப்பிரிவு**
அனுபவம் மிக்க ஆசிரியர் குழு

| | |
|---|---|
| ★Tamil | - திரு. அகிலன் |
| ★Logic | - திரு.பிரபாகரன் |
| ★Hi.Cu. | - திரு.ராஜேஸ்கண்ணா |
| ★Dra. | - திரு.பிரதீபன |
| ★Eco. | - திரு.விக்கி |

ஆரம்பம்:- 07-01-2005 வெள்ளி
a.m 8.30 (மு.நே.)
(அனுமதிகள் வழங்கப்படுகின்றன.)

(சி-40236)

---

## ஒவ்செற் மெசின் விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள ஒவ்செற் மெசின மற்றும் பிளேற் மேக்கர், பெயிலின் மெசின என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
**கணனியியல் கல்லூரி**
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
(40458) (14-15-26) T.P.222 7643

---

## நேர்முகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டமைக்கான

# அறிவித்தல்

காணி செயலணிக் குழுவிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக எம்மால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த சகல நேர்முகப் பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன.

இந்நேர்முகப் பரீட்சைகள் யாவும் வேறு தினங்களில் நடத்தப்படும் என்பதனையும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் சகலருக்கும் அறயத்தரப்படும் என்பதனால் எவரும் இது தொடர்பாகக் கவலையடையத் தேவையில்லை என்பதனையும் அறியத்தருகின்றோம்.

க.பரமலிங்கம்,
மேலதிகச் செயலாளர் (காணி),
காணி நிருவாகத் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

(சி-40242)(26-14-15)

---

# பண்டிகைக் கால பரிசு மழை!




● முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கிகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000 ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
- நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
- இச் சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப் பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

AUTHORISED AGENT
MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
● அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic

# அந்நியப் படைகள் அதிகளவில் குவிவது புலிகளுக்கும் போராட்டத்துக்கும் பாதிப்பு

## விக்கிரமபாகு கருணாரட்ன எச்சரிக்கிறார்

கொழும்பு.ஜன.6

அந்நியப் படைகள் இலங்கை மண்ணில் கால் பதிப்பது விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கும் கட்டுப்பாடுகளையும் தடைகளையும் ஏற்படுத்தும்.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைமைக்குழு உறுப்பினரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அந்நியத் துருப்புக்களின் வருகையைக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இப்படிக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2004 டிசெம்பர் 26 கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் முகமாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்திற்கு விடுத்திருந்த அழைப்பின் பேரில் அந்நிய ஆயுதப் படையினர் இலங்கை வருவதை நாம் கண்டிருக்கிறோம்.

வடக்கிலும் தெற்கிலும் ஏறத்தாள 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டும் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்தும் உள்ளதுடன், பெரியளவில் உட்கட்டமைப்புத் தொகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே. இறந்தவர்களைப் பொறுத்தவரை அநேகமான உடல்கள் கண்டெடுத்து அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

எது எப்படியாயினும், அமெரிக்க மற்றும் ஏனைய அந்நிய ஆயுதப் படையினரை இங்கு வரவழைப்பது முற்றிலும் வேண்டத்தகாததாகும். குறிப்பாக, அமெரிக்க நிர்வாகத்தினை எடுத்துக்கொண்டால், கடற்கோள் அனர்த்தம் நிகழ்ந்து 3 நாள்களாக மூச்சே விடவில்லை என 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையே விமர்சித்திருந்தது. அமெரிக்க நிர்வாகம் தனது தேவைக்காக இலங்கை அரசு விடுத்த மேற்கூறிய வேண்டுகோளின் போர்வையில் உள்நோக்கத்துடன் ஆயுதப் படையினரை அனுப்புகின்றது. அதாவது, இலங்கை மண்ணில் கால் பதித்து ஒருபுறத்தில் ஆட்சியாளர் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டும் தட்டுவதும், தமிழ் மக்களினது விடுதலைப் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதும் ஆகும்.

மறுபுறத்தில், உலக முதலாளித்துவத்தின் பின்செல்ல இலங்கையை நிர்ப்பந்திப்பதற்கும் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூகோள அமைப்பினைப் பயன்படுத்தி தனது நவகாலனித்துவ அல்லது மீள்குடியேற்றவாத நிகழ்ச்சித் திட்டத்தினை பட்டவர்த்தனமாக முன்னெடுத்துச் செயற்படுவதாகும்.

எனவேதான், இன்றைய இக்கட்டான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்நிய ஆயுதப் படைகள் கொண்டுவரப்படுவதை பலமாக எதிர்ப்பதற்காக இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளும் பரந்துபட்ட அடக்கி ஒடுக்கப்படும் மக்களும் முன்வரவேண்டும் என அழைக்கின்றோம் - என்றுள்ளது. (ஜ-3)

# வவுனியாவில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.6

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணிகள் தொடர்பான கூட்டம் இன்று வியாழக்கிழமை வவுனியா செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர்கள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள் மற்றும் ஏனைய திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு ஆளுநர் விஜயஞ்செய்யவுள்ளார் என்றும் -

அன்றையதினம் திணைக்களத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறும் -

யாழ்.செயலகத்துக்கு மாகாணசபை அறிவித்துள்ளது. (ஜ-3-4-75-12)

# நிவாரண அடிப்படையில் அரச ஊழியருக்குக் கடன்!

கொழும்பு.ஜன.6

சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புகள் ஏற்பட்டாலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 12 ஆம் திகதி வழங்கப்படும். அரச ஊழியர்களுக்கான இடமாற்றம் ஒத்திவைக்கப்படும். அரச ஊழியர்களுக்கு நிவாரண அடிப்படையிலான கடன் வழங்கப்படும்.

அரசு இந்தத் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

அரசின் இந்தப் புதிய தீர்மானங்களைப் பொது நிர்வாக அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட அறிவித்தார். அவர் மேலும் கூறியதாவது-

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் முன்னரைப்போன்று எதிர்வரும் 12 ஆம் திகதி ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். இதற்கான ஆவணங்களைத் தொலைத்தவர்கள் கிராம சேவையாளரின் கடிதமொன்றை அல்லது சான்றுப் பத்திரத்தை வழங்கி ஓய்வூதியத்தைப் பெறலாம்.

அதேபோல, உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இடமாற்றங்கள் மூன்று மாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு உதவும் வகையில் அரச ஊழியர்களின் ஒரு வருட கால ஊதியத்தை வட்டியற்ற கடனாக வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-3)

# ஐரோப்பிய ஒன்றியம் 100 கோடி யூரோ உதவி

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டுமானப் பணிகளுக்கென ஐரோப்பிய ஒன்றியம் நூறு கோடி யூரோவை வழங்கவுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் கட்டடங்களை மீளமைப்பதற்கும் வீடுகளைக் கட்டுவதற்கும் இந்தநிதி பயன்படுத்தப்படும்.

அதேவேளை -

அனர்த்தம் பாதித்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென 25 கோடி யூரோவை வழங்கவும் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது என ஒன்றியத்தின் அபிவிருத்திக்கும் மனிதநேய உதவிக்குமான ஆணையாளர் லூயி மிஷேல் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைமையை ஆராய்ந்தபின்னர் இந்த நிதி வழங்கப்படும். கடல் அனர்த்தத்தால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்பிலிருந்து நாடு மீள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் ஒன்றியம் தயாராகவிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் இக்கருத்துக்களை அவர் தெரிவித்தார்.

இதேவேளை - ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசினர். (க-3)

# பேச்சுபற்றி எதனையுமே சிந்திக்கவில்லை அவசர உதவியே இப்போது தேவையானது

## கிளிநொச்சியில் நோர்வேத் தூதுவர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.6

இலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் மிகமோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் சமாதானப் பேச்சு குறித்து நோர்வே இப்போது எதனையும் சிந்திக்கவில்லை. மக்களுக்கான அவசர உதவிகளைச் செய்வதே இந்த நேரத்தில் தேவையானது; மிகச்சரியானது.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசிய பின் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென 170 மில்லியன் அமெரிக்க டொலர்களை நோர்வே அரசு இலங்கைக்கு வழங்கவுள்ளது. அத்துடன், அவசர மனிதாபிமான உதவிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நோர்வே அரசு உதவும்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட சகல இடங்களுக்கும் நோர்வே அரசின் உதவிகள் கிடைக்கக்கூடியவாறு வழிவகைகள் செய்யப்படும். மக்கள் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறார்கள். இந்நிலையில் அரசு - புலிகள் இருதரப்பினரும் அவர்களுக்கான தேவைகளைக் கவனிக்கவேண்டும். இரு தரப்புக்குமிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இது நல்ல சந்தர்ப்பம். சமாதானப் பேச்சுக்களுக்கும் இது பேருதவியாக அமையும்.

பேரழிவு ஏற்பட்டுள்ள நிலையில், சமாதானப் பேச்சுக்கள் குறித்து நாம் இப்போது எதனையும் சிந்திக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர உதவிகளைச் செய்வதே இந்த நேரத்தில் மிகச் சரியானது - என்றார். (க-3-8)

# வயோதிபப் பெண்ணைத் தாக்கி சங்கிலி, காப்புகள் அபகரிப்பு!

## கொக்குவில் பொற்பதி பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.6

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதிப் பகுதியில் வீட்டிற்கு வந்த இருவர் வீட்டில் நின்ற மூதாட்டியைத் தாக்கிவிட்டு சங்கிலி, காப்புகள் போன்றவற்றை அபகரித்துக்கொண்டு தப்பியோடிவிட்டனர்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நடேசு தெய்வானை (வயது 77) என்ற மூதாட்டியே நகைகளைப் பறிகொடுத்ததுடன், படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது-

நேற்றுமுன்தினம் முற்பகல் மோட்டார் சைக்கிளில் மூதாட்டியின் வீட்டிற்கு வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள், மூதாட்டியை அழைத்து தண்ணீர் கேட்டுள்ளனர். தண்ணீர் எடுக்க மூதாட்டி உள்ளே சென்ற வேளையில், திருடர்கள் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த மூதாட்டியின் பேரப்பிள்ளைகளை அழைத்து அவர்களுக்கு ஏதோ பொய்யைக் கூறி அனுப்பிவிட்டு மூதாட்டி தண்ணீர் கொண்டுவந்தவுடன் அதனையும் வாங்கிக் குடித்துவிட்டு, திடீரென அருகில் இருந்த ஒரு கட்டையை எடுத்து மூதாட்டியின் முகத்தில் ஓங்கி அடித்தவுடன், அவர் மயங்கிக் கீழே விழுந்தபோது சங்கிலியையும் இரண்டு காப்புகளையும் அபகரித்துக்கொண்டு ஓடித் தப்பிவிட்டனர்.

ஏமாற்றப்பட்ட பேரப்பிள்ளைகள் திரும்பி வந்து பார்த்தபோது மூதாட்டி மயங்கி வீழ்ந்திருப்பதைக் கண்டு, அவலக் குரல் எழுப்பினர். அழுகுரல் கேட்டு, வீட்டின் உள்ளே இருந்த, மூதாட்டியின் கணவரும் அயலவர்களும் ஓடிவந்து நிலைமையை அறிந்து மூதாட்டியை உடனடியாக யாழ்.போதனாவைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

மூதாட்டியின் முகம் பெரிதாக வீங்கிக் காணப்பட்டது. கண்களிலும் காயம் ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இப்பகுதியில் அடிக்கடி இடம்பெறுவதாகவும் - பொதுமக்கள் இது தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறும் - தெரிவிக்கப்படுகிறது. (ஜ-12-190)

# தாய்க்குப் பல பிள்ளைகள் இருப்பதுண்டு ஒரு பிள்ளைக்கு இருதாய் இருப்பதுண்டா?

## இவ்வழக்கு சாலமன்சபையில் அல்ல கல்முனையில்

காரைதீவு,ஜன.6

ஒருதாயக்கு பல பிள்ளைகள் இருப்பதுண்டு. ஆனால் ஒரு பிள்ளைக்கு இருதாய்கள் இருப்பதுண்டா? என்ற வினா எழுந்துள்ளது.

இவ்வினா அன்று எழுந்த இடம் சாலமன்சபையில். இன்றோ அவ்வினா கல்முனை ஆதார வைத்தியசாலையில். சுவாரஸ்யமான சமாச்சாரத்தைப் படித்துப்பாருங்கள்.

சுனாமி தாக்கிய அன்று பிற்பகல் கல்முனையில் 03 மாதக் குழந்தையொன்று கடலில் சிக்கிக் குப்பை கூழங்களுக்குள் தள்ளப்பட்டுள்ளது. அந்த அழகான ஆண்குழந்தையைக் கண்டெடுத்த ஓர் ஆசிரியர் உடனடியாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகாகத் தனது பிள்ளை என ஒப்படைத்துள்ளார்.

பிள்ளை பிழைத்து நல்ல நிலையிலிருக்கும் இவ்வேளையில், அது என்பிள்ளை என இரு பெற்றோர் உரிமைகொண்டாடி போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

டாக்டர்கள் செய்வதறியாது கல்முனைப் பொலீஸாரிடம் விவரத்தைத் தெரிவிக்க, பிள்ளை தற்போது பொலீஸ் காவலில் ஆஸ்பத்திரியில் இருந்துவருகிறது.

இச்செய்தியால் இன்னும் புதுப்புதுப்பெற்றோர்களும் குழந்தைக்கு உரிமை கொண்டாடமலிருந்தால் சரிதான்! (ஐ-க)

# உலகப் படத்திலிருந்து மறையும் தாய்லாந்து மீனவக் கிராமம்

நொம்பென்,ஜன.6

'சுனாமி' அனர்த்தம் காரணமாகத் தாய்லாந்தின் வடக்குப் பகுதியில் அமைந்திருந்த 'பான்நாம்கெம்' என்ற மீனவக் கிராமம் கடலுள் மூழ்கியுள்ளதால் அது உலக வரை படத்தில் இருந்து மறைந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அக்கிராமத்திலிருந்து உயிர்தப்பியுள்ள பெண்மணியான மைத்ரீசாய்புத் பாடசாலைக் கட்டடம் ஒன்று மாத்திரம் அங்கு உயர்ந்து நிற்பதாகத் தெரிவித்துள்ளார்.

மரப்பலகைகளால் அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்ந்துவந்த ஆயிரத்து 700 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேரோடு அக்கிராமம் மணல் மேடாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தின் உட்பகுதி அடித்துச் செல்லப்பட்டுள்ள அக்கிராமத்தவரது மீன்பிடி வள்ளங்களைச் சூழவும் பன்றிகள் உலாவுவதாகவும் அப்பெண் கூறியுள்ளார்.

தமது கைக்குழந்தை அலைகளால் அடித்துச் செல்லப்பட்டது எனவும் தமது மூன்று பெண் குழந்தைகளுள் இளைய பெண் குழந்தையையும் மூத்த பெண் குழந்தையையும் மாத்திரம் காப்பாற்ற முடிந்தது எனவும் தன்னையும் தமது இரு குழந்தைகளையும் ஒரு கிலோமீற்றர் தூரம் வரையில் கடல் அலைகள் அடித்துச் சென்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

தமது கணவர் பற்றியும் 7 வயது இளைய பெண் பற்றியும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ள அவர், மண்மேடாக மாறியுள்ள கிராமத்தில் அழிந்து போயுள்ளதாகக் கருதப்படும் சடலங்களை மீட்கும் பணி இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார். (ஐ)

# 5,000 தொன் கோதுமை மாவை இறக்குமதிசெய்ய அரசு முடிவு

நாட்டில் ஏற்பட்டுள்ள கோதுமை மா தட்டுப்பாட்டை நீக்குவதற்காக மாவை இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

முதல் கட்டமாக 5 ஆயிரம் தொன் மாவுடன இந்தியக்கப்பலொன்று இலங்கை வரவுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கோட்டா அடிப்படையில் பேக்கரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மாவு வழங்கப்படுகின்றது. இதனால் பாணுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளேயிடம் இது குறித்துப் பல தரப்பினரும் செய்த முறைப்பாட்டை அடுத்தே அமைச்சர் இறக்குமதிக்கான உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டார்.

பிறிமா நிறுவனத்துடன் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக மேற்படி நிறுவனம் குறிப்பிட்ட தொகையான மாவை மட்டுமே விநியோகித்துவருகின்றது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் ஊடாக வழங்கப்படும் இந்த மா பேக்கரிகளின் தேவைக்குக்கூடப் போதுமானதாக இல்லை என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் அதிக மாவைப் பயன்படுத்துவது மலையகத் தோட்டத் தொழிலாளர்களேயாவர். அங்கும் மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கிடைக்கும் மாவை அப்பகுதி வர்த்தகர்கள் பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்றுக் கொள்ளைலாபம் பெறுகின்றனர் என மக்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. (எ-க)

# உறவுகளுக்கு உதவிய நல்லன்பர்களுக்கு நன்றி

பாதிப்புற்றோருக்கு உதவும் உதயனின் நிவாரணப் பணிக்குப் பணமாகவும், பொருள்களாகவும் உதவி செய்த மனித நேயமுள்ள அன்பர்களின் பெயர் விவரங்கள் தொடர்ந்து பிரசுரிக்கப்படுகின்றன.

இயற்கையின் அனர்த்தத்தால் சொல்லொணா இழப்புகளுக்கும் சோகங்களுக்கும் ஆளாகிய உறவுகளுக்கு உடனடி உதவிகளை வழங்க முன்வந்த இரக்கமும் நல்மனமும் கொண்ட உதயன் வாசகர்களுக்கு நன்றி சொல்கிறோம்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது"-என்ற வள்ளுவத்துக்கு இசைவாக உடன் உதவிகளை வழங்கிய அன்பர்களின் பெயர் விவரங்களை இங்கே தருகிறோம்.

### 04.01.2005இல் பணமாக உதவி செய்தவர்கள்

| பெயர் | விலாசம் | தொகை |
|---|---|---|
| திருமதி சி.சந்திரசேகரம் | பன்னாலை, தெல்லிப்பழை | 20,000.00 |
| தி.செல்வரட்ணம் | அரியாலை | 1,000.00 |
| திருமதி புவனேஸ்வரி கருணாநிதி | நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் | 1,000.00 |
| சிவபாக்கியம் திருநாவுக்கரசு (மோறா) | மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் | 1,000.00 |
| வ.இராசையா | கோண்டாவில் - இருபாலை வீதி, கோப்பாய் | 5,000.00 |
| இ.இராஜேஸ்வரன் | கோண்டாவில் - இருபாலை வீதி, கோப்பாய் | 2,000.00 |
| V.சுந்தரலிங்கம் | 42, விபுலானந்தர் வீதி, அரியாலை | 1,000.00 |
| நடராஜா சந்திரராஜா | கோண்டாவில் கிழக்கு | 2,000.00 |
| மேலின் ஜெனிற்றா அன்ரன்ஜோ | [illegible] - லண்டன் | 10,000.00 |
| பிரணவி ஜெயதேவன் | கனடா | 5,000.00 |
| பவித்திரா ஜெயதேவன் | கனடா | |
| வை.பேரம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) | தலையாளி, கொக்குவில் | 10,100.00 |
| பொ.கெங்காதரன் (பாபு, பிரான்ஸ்) | 6/5, பெருமாள் கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம் | 37,022.00 |
| க.சுதர்சனக்குருக்கள் | வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில், புலோலி | 1,000.00 |
| குருசாமி மணிவண்ணன் | தாவடி வடக்கு, கொக்குவில் | 25,000.00 |
| சக்திவல்லவன் உதயபிரபா | வட்டுக்கோட்டை வடக்கு, சித்தன்கேணி | 10,000.00 |
| கே.மகாலிங்கம் | வட்டுக்கோட்டை வடக்கு, சித்தன்கேணி | 500.00 |
| சிறிஸ்கந்தராஜா சறோஜினி | நுணாவில், சாவகச்சேரி | 500.00 |
| ராஜநாயகி கதிர்காமநாதன் | இல.9, 6ஆவது லேன், பலாலிறோட், கந்தர்மடம் | 500.00 |
| குமரகோட்டம் சனசமூக நிலையம் | கோண்டாவில் | 10,610.00 |
| க.தர்மசீலன் | மதுவரி நிலையம், மல்லாகம் | 2000.00 |
| இ.நேசகுமார் | மதுவரி நிலையம், மல்லாகம் | 1000.00 |
| சோ.விஜயருபன் | மதுவரி நிலையம், மல்லாகம் | 1000.00 |
| ம.மகிழ்ராஜன் | மதுவரி நிலையம், மல்லாகம் | 1000.00 |
| மா.வைகுந்தவாசன் | மதுவரி நிலையம், மல்லாகம் | 1000.00 |
| | முன்வரவு | 3,60,609.00 |
| | | 5,09,841.00 |

### 04.01.2005 இல் கிடைத்த பொருள்கள்

| | | |
|---|---|---|
| சிவபாக்கியம் திருநாவுக்கரசு | மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் | உடுப்புவகை |
| ஆர்.ஞானசம்பந்தர் | இணுவில் மேற்கு, இணுவில் | உடுப்புவகை |
| திருமதி கனகரத்தினம் | 56, ஓட்டுமடம் வீதி, யாழ். | சிற்றுண்டிவகை |
| சிறிஸ்கந்தராஜா சறோஜினி | நுணாவில், சாவகச்சேரி | உடுப்புவகை |
| சி.முத்தையா | உடுவில் | உடுப்புவகை |
| அன்னலட்சுமி கணேசன் | இராசாவின் தோட்டம், யாழ். | உணவுப்பொருள்கள், உடுப்புவகை |

## சுற்றுப்புறச்சூழல் பாதிப்பினால் தொற்று நோய்கள் பரவும் அபாயம்!

### சுகாதார சேவைகள் ஒருங்கிணைப்புச் செயலகம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.6

'சுனாமி' பேரனர்த்தத்தால் ஏற்பட்டுள்ள சுற்றுப்புறச்சூழல் பாதிப்பினால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு வடமராட்சி நெல்லியடியில் அமைந்துள்ள சுகாதார சேவைகள் ஒருங்கிணைப்புச் செயலகம் வெளியிட்டுள்ள செய்திக குறிப்பில் தெரிவித்துள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கபட்டுள்ளதாவது:-

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரம் பேணப்படவேண்டிய அவசியத் தேவை எழுந்துள்ளது. எனவே, உடனடி செயற்பாடுகள் உயிரிழப்பைத் தவிர்க்கவல்லவை.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிணறு சுத்திகரிக்கப்படவேண்டும். அத்துடன், தொற்றுநீக்கி மருந்துகளும் விசிறப்படவேண்டும். ஆகையால், தெளிகருவிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் தொண்டர்களின் தேவை எழுந்துள்ளது.

இவற்றை வழங்கக்கூடிய பொது அமைப்புகளோ தனி நபர்களோ எமது செயலகத்துடன் தொடர்புகொண்டு ஒத்துழைப்புத் தருமாறு கேட்கின்றோம் - என்றுள்ளது. (8-202)

## சிறுவர்களைக் காணவில்லையென மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.6

உரும்பிராய், செல்வபுரத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் கடைக்குச் சென்றவேளை காணாமற்போய்விட்டனர் எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் அவர்களது தந்தையர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்தவர்களான குணபாலசிங்கம் வேஸ்குமார் (வயது 10), தனபாலசிங்கம் ஜீவகுமார் (வயது 13) ஆகிய இருவருமே காணாமற்போனவர்களாவர்.

கடந்த திங்கட்கிழமை மாலை வீட்டிலிருந்து அருகிலுள்ள கடைக்குச் சென்ற இரு சிறுவர்களும் பின்னர் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக காணாமற்போனோர் விசாரணை அதிகாரி ரி.மொறின் மேற்கொண்டு வருகிறார். (8-7)

## மத்தியஸ்தர் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.6

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த பரீட்சை இயற்கை அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான முன்னோடிப் பயிற்சி வகுப்புகள் பற்றியும், பரீட்சை நடைபெறும் திகதி குறித்தும் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் மு.பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். (3-203-190)

## தென்னிந்திய நடிகரின் நிதியுதவி

கொழும்பு,ஜன.6

இலங்கையில் இடம்பெற்ற கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தென்னிந்திய பிரபல நடிகர் விஜயகாந் 50 லட்சம் ரூபா நிதியினை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கு அவரால் அனுப்பப்பட்ட காசோலையைத் தொழில் அதிபர் அன்ரனிராஜா 'சக்தி' 'சிரச' நிவாரணப் பணிக்கு நேற்றுமுன்தினம் வழங்கினார். (8-7)

## நிவாரண உதவி

தொல்புரம்,ஜன.6

'சுனாமி' இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்குச் சங்கானை அரசினர் வைத்தியசாலை ஊழியர்கள் ஒரு தொகை நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளனர். (8-ரி-202)


ASIAN COMPUTERS வழங்கும்

கணினி கற்கைநெறிகளுக்கான போட்டிப் பரீட்சை

கல்வி ஆண்டு 2005

Registered with Ministry of Tertiary & Vocational Education

2005 Mega Intelligent Test

கணினி கற்கைநெறிகளுக்கான

மெகா போட்டிப் பரீட்சை

1 Diploma in Computer Software Engineering 5 months DCSE

2 Advanced Diploma in Web Multimedia ADWM

3 Professional Diploma in e - Developer PED

4 Diploma in Office Automation with Accounting DOA

5 Advanced Diploma in Hardware & Networking ADHN

6 Professional Diploma in Graphic Design PDGD

வெல்லுங்கள் 75% புலமைப்பரிசில்




யாருக்கு ?

அனைவருக்கும் கணினிக்கல்வி என்ற நோக்கில், வயது வித்தியாசமின்றி கணினித்துறையில் ஆர்வமுடைய அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறலாம்.

பரீட்சைகள் பற்றிய விபரம்

பரீட்சைகள் G. C. E. (O/L) பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு சார்ந்ததாக அமையும். இப்போட்டிப் பரீட்சைகள் அரச பாடசாலைகளில் மட்டுமே நடைபெறும்.

மேலதிக விபரங்கள் - இலவச அனுமதிகள்

இலவச அனுமதிகளையும், விபரங்களையும் யாழ்நகர், சுன்னாகம், நெல்லியடி மற்றும் கிளிநொச்சியில் (கணினியியல் கல்லூரி) அமைந்துள்ள ASIAN கணினி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம்: 2 G, ஸ்ரான்லி வீதி, & 021-222 5677

சுன்னாகம்: 108,K.K.S.வீதி, (Jet Motors மேல் மாடியில்) சுன்னாகம். Tel : 071-2501589

நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198

கிளிநொச்சி: கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி.

# தமது பகுதிகளில் மனிதாபிமானப் பணிபுரிவதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை என்கின்றனர் புலிகள்

## விஷமத்தனமான ஊடகச் செய்திகளுக்குக் கண்டனம்

கிளிநொச்சி,ஜன.6

தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கு தடையோ, கட்டுப்பாடுகளோ கிடையாது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

மனிதாபிமான உதவிகளைப் புலிகள் தடுக்கின்றனர் என்றும் - நிவாரணப் பொருள்களுக்கு வரி விதிக்கின்றனர் என்றும் திட்டமிட்டுப் பரப்பப்படும் பொறுப்பற்ற ஊடகச் செய்திகளுக்குப் புலிகள் கடும் கண்டனத்தையும் வெளியிட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாகப் புலிகள் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கில் சுனாமி பேரலையினால் ஏற்பட்ட அழிவால் இடம்பெயர்ந்தவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்பாக உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கான அவசர வேண்டுகோள் இது. முற்று முழுதாக மனிதாபிமானம் சார்ந்த விடயங்களில் மக்களைப் பிழையாக வழி நடத்தும் விதமான தவறான ஊடக அறிக்கைகளை நாம் காணக்கூடியதாக உள்ளது. ஊடகச் செய்திகளில் தவறுகளும் பக்கச்சார்புத் தன்மையும் இருப்பது, தற்பொழுது முன்னெடுக்கப்படும் மனிதாபிமான உதவிப் பணிகளுக்கான கூட்டு முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் என்பதால், அவல நிலையைக் கருத்திற்கொண்டு செய்தி வெளியிடுவதில் அவதானமும் பொறுப்பும் இருக்கவேண்டும் என்று இதனூடாக வேண்டிக கொள்கின்றோம்.

ஆரம்பக்கட்டத்தில் அநேகமான ஊடகவியலாளர்கள் கொழும்பை மையமாகக் கொண்டிருக்கும் வகையில், ஊடகக் கவனம் கொழும்புக்கு அண்மித்த பிரதேசங்களிலேயே இருந்தது. இது எங்களால் விளங்கிக் கொள்ளக் கூடியது. தற்பொழுது ஊடகக் கவனம் வடக்கு - கிழக்கின் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் திரும்பியிருக்கும் வகையில், இன்னும்கூட செய்திகளில் சில உண்மைத் தன்மையற்ற நிலை காணப்படுவது அதிர்ச்சிதருவதாக உள்ளது. "வடக்கில் புலிப் புரட்சியாளர் நலன்புரி நிலையத்துக்குத் தீ வைத்தார்கள்" "தெற்கில் இருந்துவரும் உதவிகள் விடுதலைப் புலிகளால் தடுக்கப்படுகின்றது" "ரஷ்ய வைத்தியர்களுக்குப் புலிகளின் பிரதேசத்துக்குச் செல்ல அனுமதி மறுப்பு" போன்ற செய்திகள் துரதிர்ஷ்டவசமானவை. இத்தகைய செய்திகள் தொடர்பாகப் பொருத்தமான தரப்புகளிடம் இருந்து, உதாரணத்துக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அல்லது சம்பந்தப்பட்ட தரப்புடன் உண்மைத் தன்மை பற்றி சரி பார்த்துக்கொள்வது உள்நோக்கத்துடன் செய்திகளை வழங்கும் மூலங்களில் தங்கியிருப்பதைவிடச் சிறந்தது.

இந்தவகையில், மனிதாபிமானப் பணி தொடர்பான செய்திகளில் திரிபு ஏற்படுத்தாமல் இருப்பதை ஊடகங்களுக்கு வசதி செய்து கொடுக்கும் முகமாக, சில விடயங்களைத் தெளிவுபடுத்துவது பொருத்தமானது எனக் கருதுகின்றோம்.

தனிநபரோ, நிறுவனங்களோ மற்றும் எவராக இருப்பினும் அழிவுப் பிரதேசங்களுக்கு வந்து பார்வையிடுவதையும், நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களைச் சந்திப்பதையும் மாவட்ட மட்டத்தில் உள்வரும் எல்லா உதவிகளையும் பொறுப்பாக பதிவுக்குட்படுத்தி வெளிப்படைத் தன்மையுடன் வைத்திருப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகளின் காத்திரத் தன்மையை அறிந்துகொள்வதற்கும் நாம் திறந்த மனதுடன் வரவேற்கின்றோம். மாவட்ட மட்டத்தில் அரச அதிபர், சர்வதேச உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இக்கட்டமைப்பு, மிகச் செயற்றிறன் மிக்க ஒன்றென நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கு விஜயம் செய்யும் சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், ஐ.நா. அமைப்பின் அதிகாரிகள் போன்றோர் இக்கட்டமைப்பின் செயற்றிறனை வெகுவாகப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எங்கள் நிர்வாகப் பிரதேசத்துக்குள் மனிதாபிமானப் பணி தொடர்பாக எல்லோருக்கும் தங்குதடையற்ற அனுமதி உண்டு என்பதுடன், உதவிப் பொருள்களைக் கொண்டு வரும் வாகனங்கள் விடுதலைப் புலிகளால் திருப்பி அனுப்பப்படுகின்றன என்ற குற்றச்சாட்டில் எவ்வித உண்மையுமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். மனிதாபிமான உதவிக்கென கொண்டுவரும் பொருள்கள்மீது வரியேதும் அறவிடப்படுவதில்லை என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

மனிதாபிமானப் பணி தொடர்பான விடயங்களில் விளக்கங்கள் தேவைப்படின் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.(ஐ)

## வடக்கு-கிழக்குக்கான சர்வதேச உதவிகள் யாவும் கூட்டுச் செயலணி மூலம் கிடைக்க உதவுங்கள்

### யாழ். மாவட்ட கல்விப் பேரவை ரணிலுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.6

சர்வதேச சமூகத்தினால் வடக்கு- கிழக்கில் சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் யாவும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டுள்ள சுனாமி பேரழிவு புனர்நிர்மாண கூட்டுச் செயலணியினர் மூலம் செயற்படுத்தப்படுவதற்கு உதவவேண்டுமென யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கையளித்துள்ள கடிதத்தில் வற்புறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு பேரவை கையளித்துள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட அமைதியின் அனுகூலங்களை வடக்கு - கிழக்கு மக்களால் அனுபவிக்க முடியவில்லை. வடக்கு - கிழக்கு மக்களின் சிதறடிக்கப்பட்ட கட்டமைப்புகளும், உளநலன்களும் எதுவித முன்னேற்றமுமின்றி முடங்கிக்கிடக்கின்றன. இந்த நிலைமையை மாற்றியமைக்க அரசும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வடக்கு-கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கென் உருவாக்கப்பட்ட 'சிரான்' அமைப்பும் செயலற்றதாகி விட்டது.

இராணுவ நடவடிக்கைகளால் துன்பங்களை அனுபவித்த எமது வடக்கு - கிழக்கு மக்கள் இப்பொழுது சுனாமி கடல்கொந்தளிப்பினால் பெரும இடர்பாடுகளுக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு வடக்கு - கிழக்கு மக்களுக்குச் சர்வதேச அமைப்புகளும், அரசுகளும் வழங்குகின்ற உதவிகள் யாவும் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டுள்ள பேரழிவு புனர்நிர்மாண கூட்டுச்செயலணியின் ஊடாக முன்னெடுக்கப்படுவது அவசியம் என்று நாம் கருதுகின்றோம். இந்த விடயத்தில் தாங்கள் கவனமெடுத்து எம்மக்களுக்கு உதவுவீர்கள் என்று நம்புகின்றோம் - என்றுள்ளது. (ப-8)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் கொரிய மருத்துவக்குழு சேவை!

யாழ்ப்பாணம்,ஜன.6

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த கொரிய மருத்துவக் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்று கிளிநொச்சி வைத்தியசாலையில் தமது மருத்துவ சேவைகளை ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி மருத்துவமனையில் விசேட கருமபீடம் ஒன்றை உருவாக்கி, அங்கிருந்து கொண்டு இவர்கள் தமது பணியைத் தொடர்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கருமபீடத்தில், பாதிக்கப்பட்டவர்களின் நலன்கருதி நடமாடும் மருத்துவ சேவை ஒன்றையும் உருவாக்கியுள்ளனர்.

இந்த மருத்துவக் குழுவினர் தம்முடன் எடுத்துவந்த மருந்துப் பொருள்களில் பெரும் பகுதியைக் கிளிநொச்சி அரச மருத்துவமனையில் களஞ்சியப்படுத்தியுள்ளனர்.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கேட்டுக்கொண்டதற்கிணங்க கொரிய மருத்துவக் குழுவினர் முல்லைத்தீவுப் பகுதிக்கான நடமாடும் மருத்துவ சேவை ஒன்றையும் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை -

தேவை ஏற்படும் பட்சத்தில் மேலும் ஒரு தொகுதி மருத்துவ ஆளணியினரையும் மருந்துப் பொருள்களையும் இங்கு எடுத்து வருவதற்குத் தாம் தயாராக உள்ளதாகக் கொரிய வதிவிடப்பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன், அதிக பாதிப்பு ஏற்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கும் மருத்துவப் பணியை ஏற்படுத்தித்தருமாறு கொரிய வதிவிடப் பிரதிநிதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (4-12)



சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த வடமராட்சி மற்றும் வன்னிப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தும் அரங்காடல்களில் ஈடுபட்டிருக்கும் ஆசிரிய மாணவர்கள் நலன்புரி முகாம் ஒன்றில் பாதிக்கப்பட்டவர்களோடு உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## தென்மராட்சியில் தங்கியிருந்த அகதிகள் திரும்புகின்றனர்

தென்மராட்சி,ஜன.6

தென்மராட்சி பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த பெருமளவு குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்புகின்றனர் என்று பிரதேச செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் காலை 10மணிக்குத் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின்படி ஐந்து நலன்புரி நிலையங்களின் 145 குடும்பங்களைச் சேர்ந்த 613 பேரும் உறவினர் வீடுகளில் 70 குடும்பங்களைச்சேர்ந்த 252பேரும் தங்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், இடைக்குறிச்சி தேவாலயம் ஆகிய நலன்புரி நிலையங்களிலேயே இப்போது மக்கள் தங்கியுள்ளனர். (4-117)

## நடுக்குடத்தனை முகாமுக்கு மனித உரிமை அதிகாரிகள் விஜயம்

யாழ்ப்பாணம்,ஜன.6

கடந்த திங்கட்கிழமை சீருடையினரால் எரித்து நாசமாக்கப்பட்ட நடுக்குடத்தனை அகதி முகாமை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் பார்வையிட்டு நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிமக்கள் தங்கியிருந்த கொட்டகை கடந்த திங்கட்கிழமை சீருடையினரால் எரித்து நாசமாக்கப்பட்டது.

இதனையடுத்தே மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலக செயற்றிட்ட அதிகாரி வேழினி மற்றும் விசாரணை அதிகாரி சுரேந்திரன் ஆகியோரே நேற்றுமுன்தினம் அங்கு விஜயஞ்செய்து அங்குள்ள மக்களோடு கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தனர். (3-13)

## மாதகல் பிரதேச அழிவு: அரச அதிபருக்கு அறிக்கை

வலி.தென்மேற்கு,ஜன.6

மாதகல் சம்பில்துறை மற்றும் மாதகல் குருமார்துறை ஆகிய கடற் கடரைப்பகுதிகளில மீனவர்களுக்கு கடல் கொந்தளிப்பு அனர்த்தங்களின் போது ஏற்பட்ட இழப்புகள் மற்றும் பாதிப்புகள் குறித்து நேரடியாக அறிந்துகொள்வதற்காக வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா அங்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

மாதகல் தெற்கு கிராம அலுவலர் ந.நாகராசா, மாதகல் மேற்கு கிராம அலுவலர் எஸ்.கருணைரட்ணம், மாதகல் கிழக்கு கிராம அலுவலர் இ.துரைராசா ஆகியோரும் பிரதேச செயலருடன் சென்று இப்பகுதி மீனவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி எடுத்துகூறினார்கள்.

அத்துடன், இப்பகுதி கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் குறைபாடுகள், இழப்புகள் பற்றிய விவரங்களை பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா திரட்டியுள்ளார்.

யாழ். மாவட்ட அரச அதிபரினதும் ஏனைய சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளினதும கவனத்திற்கும் நடவடிக்கைக்கும் இப்பகுதியில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் இழப்புகள் குறித்து அறிக்கை ஒன்றை அவர் சமர்ப்பித்துள்ளார்.(4-135)

## மோ.சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் காயம்

கைதடி,ஜன.6

எதிரெதிரே வந்த முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவரும் காலிலும், கையிலும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இச்சம்பவம் கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் கைதடிச் சந்தியில் இடம்பெற்றிருக்கின்றது.

இச்சம்பவத்தில் கைதடி மத்தியைச் சேர்ந்தவர்களான குஞ்சன் ஆனந்தராசா (வயது20), தேவராசா அமிலன் (வயது21) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் ஓட்டிச்சென்ற மோட்டார் சைக்கிளும் இச்சம்பவத்தில் சேதமடைந்துள்ளது. (4-75)

யாழ். பல்கலைக்கழகத்தில்

# தடைப்பட்ட பரீட்சைகள் 10ஆம் திகதிமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.6

'சுனாமி' பேரனர்த்தம் காரணமாகத் தடைப பட்ட யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 10ஆம் திகதிமுதல் நடை பெறவுள்ளன என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் அறிவித்துள் ளார்.

உயர் கற்கைகள் பீடத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி I பரீட்சைகள் எதிர் வரும் 10ஆம் திகதியும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி II பரீட்சைகள் எதிர்வரும் 13ஆம் திகதியும் நடைபெறும்.

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத் தின் பரீட்சைகள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் நடைபெறும். கலைப்பீடத்தின் இராம நாதன் நுண்கலைக்கழக மூன்றாம் வருட, இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (மீள் பரீட்சைகள் உட்பட) எதிர்வரும் 17ஆம் திகதி முதல் நடைபெறும்.

கலைப்பீட இரண்டாம் வருட, இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளும், இராமநாதன் நுண்கலைக்கழக நாலாம் வருட முதலாம் அரையாண்டு விசேட பரீட்சையும் எதிர்வரும் 19ஆம் திகதிமுதல் நடைபெறும்.

புதிய பரீட்சை அட்டவணைகளைப் பரீட் சார்த்திகள் தத்தமது பீடங்களில் பார்வையிட லாம் என்றும் துணைவேந்தர் அறிவித்துள் ளார். (ஐ-202)

# பன்றியைத் துரத்திச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டார்

தென்மராட்சி,ஜன.6

பயிர்களை நாசம் செய்த பன்றிகளைத் துரத்திச் சென்ற இளம் குடும்பஸ்தர் மிதிவெடி யில் அகப்பட்டு கால் பாதத்தை இழந்தார். இவருடன் சென்ற மற்றொருவர் காயமடைந் தார்.

கடந்த 3ஆம் திகதி இரவு 10 மணிக்குக் கல்வயல் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற் றது.

கல்வயல், வேதவணப் பிள்ளையார் கோயி லடியைச் சேர்ந்த கந்தசாமி சிவசுதன் (வயது 29) என்பவர் கால்பாதத்தை இழந்தார். இரத் தினம் (வயது 55) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டு, கந்தசாமி சிவ சுதன் என்பவர் யாழ். போதனா வைத்தியசா லைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

கல்வயல் பகுதியில் நெற்பயிர்களைப் பன்றிகள் அழித்துவருவதால் பயிர்களைப் பாதுகாக்க இரவுக் காவல் கடமைக்குச் சென்ற தாகவும் அங்கே கூட்டமாக வந்த பன்றிக் கூட்டத்தினைத் துரத் திய வேளையில் மிதி வெடி வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதத்தை இழந் தவரின் இரு சகோ தரர்கள் ஏற்கனவே மிதிவெடியில் அகப் பட்டுக் கால்களை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (8-117)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி க.சிவப்பிரகாசம்
அவர்களின் அன்பு மாமனார்

**கந்தையா கணபதிப்பிள்ளை**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்,
ஆத்மா சாந்திக்கும் பிரார்த்திக்கிறோம்.

யாழ்/சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயம்,
சாவகச்சேரி. (சி-40246)(26-15-17-24)
அதிபர், ஆசிரியர்கள்.
மாணவர்கள்.



## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் கைதடி

### தற்காலிக அடிப்படையில் கிளைமுகாமையாளர்களை நியமித்தல்

எமது சங்கத்தில் மேற்குறிப்பிடும் பதவிக்கு சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி: கிளைமுகாமையாளர் - தற்காலிகம்
2. சம்பளம்: ரூபா 3500 - 4850 கூ.வே.ஆ.குழுவின்
   65x10 - 70x10
   சுற்றறிக்கை 118/82 இற்கு அமைய
   சம்பளக் குறியீட்டு எண் 208/15இன்படி
3. வயதெல்லை: 21 - 45 வருடங்கள்
4. நியமனம் தற்காலிகமானது
5. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
6. சங்கத்தால் கோரப்படும் பிணை செலுத்தப்படல் வேண்டும்.
7. தகைமை:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம்/க.பொ.த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், சிங்கள/தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களி லான சித்தி. சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன், கணனி அறிவு டையோர்க்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

08. விண்ணப்ப முடிவு திகதி: 13-01-2005

விண்ணப்பபடிவத்தினை ரூபா 10/- செலுத்தித் தலைமைக்கந்தோர் வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு, ப.நோ.கூ.சங்கம், கைதடி" என்ற முகவரிக்கு நேரடியா கவோ அன்றேல் பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக் கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத் துடன் சான்றிதழ்களின் போட்டோப் பிரதி இணைக்கப்படல் வேண் டும். இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தென்.மேற்குப் ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய் வீதி, கைதடி.
05-01-2005 (சி-40251)(26-15-17-24)
- பொதுமுகாமையாளர்.


'சுனாமி' அனர்த்தப் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணி - யாழ். மாவட்டம்
**Tsunami Disaster Rehabilitation Joint Task Force - Jaffna District**




கூட்டுச் செயலணிப் பணிமனை - வடமராட்சி
JOINT TASK FORCE SECRETARIAT - VADAMARADCHY

'சுனாமி' பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் 'சுனாமி அனர்த்தப் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணி'யின் கட்டமைப்பை விளக்கும் மாதிரிப் படம் இது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை

## புனர்வாழ்வு கூட்டுச் செயலணி மகஜர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடற்கொந்தளிப்பால் ஏற்பட் டுள்ள சேதங்கள் தேசிய சர்வதேச ஊடகங்களில் அதிக மாக வெளியிடப்படவில்லை. இதனால், வெளிநாட்டு உதவிகள் வேறு இடங்களுக்கு மாற்றி அனுப்புவதற்கு வழிவகுத்துள்ளது. யாழ்ப்பாணத்துக்கு நிவாரண உதவி கள் அனுப்பப்படுவதாக அரசு பரப்புரை செய்துகொண்ட போதிலும் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டு பத்து நாள் களுக்குமேல் ஆகிவிட்டபோதிலும், எமது மக்களுக்கு இன்னமும் அந்த நிவாரணம் வந்து சேரவில்லை.

'சுனாமி' அனர்த்தப் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சமர்ப் பித்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 'சுனாமி' அனர்த்த விளைவு களை கண்டறியும்பொருட்டு நேற்று வருகைதந்த எதிர்க் கட்சித் தலைவரைச் செயலணி வரவேற்றிருப்பதுடன், புலிகளினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு பாதிக் கப்பட்ட மக்களுக்கு உயர்மட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமானால், புலிகளின் சுயாட்சி அதிகார சபைக்கான ஆலோசனைகள் முக்கியத்துவம் பெறவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இயற்கை அனர்த்தங்கள் வடக்கு - கிழக்கு, தெற்கு, மேற்கு என்று பாரபட்சம் காட்டுவதில்லையென்பது இன்றைய பேரழிவினால் நாம் பெற்றுள்ள முக்கிய படிப் பினையாகும். இதுவரைகாலமும் பாரபட்சமும் அநீதியுமான கொள்கைகளைப் பின்பற்றி வந்துள்ள அரசியல்வாதிகள் இதை உணர்ந்துகொள்ளவேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

தென்மராட்சி,ஜன.6

சாவகச்சேரி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கத்தினர் சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர் கள் ஆகியோரின் கல்விகற்கும் பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்களை இவ்வாரம் வழங்கவுள்ளனர். ஒவ்வொரு மாணவருக்கும் தலா 250 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. 322 மாணவர்கள் இப்பொருள்களைப் பெறவுள்ளனர்.

கைதடி, நாவற்குளி ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்திலும், மட்டுவில், சரசாலை ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சர சாலை சீனி உற்பத்தி நிலையத்திலும் மீசாலை, வேம்பிராய் ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் களுக்கு மீசாலை வீனஸ் முன்பள்ளியிலும் ஏனை யோருககுச் சாவகச்சேரிப் பனை தென்னைவள அபிவிருத்தி நிலையத்திலும் வைத்து ஒரே நாளில் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

சங்கத்தின் கல்வி நிதித்திட்டத்திற்குச் சங கத்தினால் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளதாகச் சங்கப் பொது முகாமையாளர் வே.கிருஷ்ணன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக அனுமதிபெற்ற மற்றும் ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர், பணியாளர் ஆகியோரின் பிள்ளைகளுக்கு அண்மையில் சங்கத்தினால் புலமைப் பரிசில்களும், வங்கி வைப்புச் சான் றிதழ்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (8-177)


## சி.க. சுசீந்திரன்

மாபிள்பதித்தல், குளியலறை
உபகரணங்கள் பொருத்துநர், வயறிங்
பிளமிங் வேலைகள் அனைத்திற்கும்
நாடுங்கள்: **சி.க.சுசீந்திரன்**
தொடர்புகளுக்கு:
தி.ஐங்கரன்,
மெய்கண்டான் வீதி, மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.
தொலைபேசி: 0777044926
0773151386
(40489) (24-15-17)



## சமையலுக்கு ஆள்கள் தேவை

சமையல் வேலையில்
அனுபவமுள்ள
☆ சமையல் உதவியாளர்
☆ றொட்டி மேக்கர்
☆ ரீ மேக்கர்
ஆகியோர் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.
**திறீ ஸ்ரார் ஹோட்டல்**
162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-40245)



## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக ஜே/126 கிராம அலுவலர்
திரு.கு.சாந்தமோகன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கணேஸ்வரி குணபாலசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர். (சி-40250) (15-17-24)
பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.



## மரண அறிவித்தல்

### நல்லதம்பி தர்மலிங்கம்

(தெனியாய வர்த்தகர்)



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் திரு நெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட நல்ல தம்பி தர்மலிங்கம் 01.01.2005 சனிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - வள்ளி யம்மை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவகாமிப்பிள்ளை தம்பதி களின் மருமகனும் காலஞ்சென்ற யோகம்மா வின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாக ரத்தினம் மற்றும் தம்பையா, இரத்தினம் ஆகி யோரின் அன்புச் சகோதரனும் கமலாதேவி, தனலெட்சுமி (துணம்), பராசக்தி (ஞானம்), நகுலாம்பிகை (குணம்), சந்திரபாலன் (கண்ணா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விசுவலிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் நாரேந்திரநாதன், இராஜகோபால், வசந்தகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் அன்னம்மா, காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், பொன் னுத்துரை மற்றும் செல்லம்மா, இராசம்மா, ஏகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2005) வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, காலை 10 மணிக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*59, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*
0777 110858 (40490) (24-15-17)
தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# நலன்புரி முகாம்களில் பள்ளிச் சிறுவர்கள் தங்கள் ஆசிரியர் வரவுக்காக காத்திருப்பு

## கல்வி மீது அதீத ஆர்வம் ஆனால் கற்றல் உபகரணங்கள் இல்லை




சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவலநீக்க ஆற்றுப் படையரங்கச் செயற்பாட்டின் தொடராக 04.01.2005 இல் யாழ். கல்வி வலய ஆசிரியர்கள் வட இந்து மகளிர் கல்லூரியிலும், கல்வியியற் கல்லூரி மாணவர்கள் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்திலும், யாழ்பல்கலைக்கழக தெருவெளி அரங்கக் குழு, அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் இணைந்து ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

அவர்களுடனான அரங்காடலில் தமது துன்பங்களைப் பகிர்ந்து ஆறி வருகின்ற மக்கள், தமது எதிர்காலம் பற்றிய கதையாடல்களிலும் ஈடுபடுகின்றனர். முக்கியமாகத் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி ஆர்வமாக உரையாடுகின்றனர்.

இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தமது அனுபவங்களினூடாகப் பல கருத்துக்களைக் கல்விச் சமூகத்திற்கு முன் வைத்துள்ளார்கள். ஆசிரியர்கள், நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களை அணுகிய போது, "நீங்கள் எங்களைத் தேடி அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தது எங்களுக்குச் சந்தோசத்தைத் தருகுது" என்று குறிப்பிட்டார்கள். பிள்ளைகளுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் தம்மை வந்து பார்க்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பிள்ளைகளிடமும் பெற்றோரிடமும் மிகுந்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அங்குள்ள மாணவர்களும் பெற்றோர்களும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதேவேளை, இச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடையாகப் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாகக் கருதுகின்றார்கள். பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்கள், கொப்பிகள், கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் அனைத்தையுமே கடலில் பறிகொடுத்த இந்த நிலைமையில் தமக்கு அவற்றை வழங்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

பாடசாலையில் அனுமதிக்கும்போது வழமையாக நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவேண்டுமென ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். குறிப்பாக, கணிப்பீடுகள், விடுகைப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்ற ஆவணங்கள், பாடசாலைச் சீருடை, சப்பாத்து, கற்றல் உபகரணம் போன்ற விடயங்களில் தளர்வாக இருப்பதன் மூலமே இவர்கள் தமது கல்வியைத் தொடர முடியும். ஆசிரியர், தளபாடம், புத்தகம் பற்றாக்குறை எனக் காரணங்கள் காட்டி நிராகரிக்காது, எந்த ஒரு பிள்ளைக்குமே பாடசாலை அனுமதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். உளவியல், பொருளாதார ரீதியாகத் தாக்கப்பட்டுள்ள இந்த மாணவர்கள் வகுப்புகளிலே விஷேடமாகக் கவனிக்கப்பட வேண்டியதும் அவசியம் ஆகும்.




வழமை மாதிரிப் பிள்ளையை எல்லாத்தையும் கொண்டுவா என்று பள்ளிக்கூடம் நின்றால் என்னால பிள்ளையைப் படிக்க விடேலாது என்ற பல பெற்றோர்களின் ஆதங்கம் கல்வி அதிகாரிகளால் நிச்சயம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.


அந்தப் பிரதேசத்தின் எதிர்காலச் சந்ததியின் வாழ்வை வளப்படுத்துவதற்கு கல்விச் சமூகம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். அவலநீக்க ஆற்றுப்படையரங்கச் செயற்பாடுகளில் புதிய ஆசிரியர்கள் இணைந்துள்ளார்கள். மேலும், ஆசிரியர்கள் இணைந்து செயற்பட வேண்டுமென அரங்க செயற்பாட்டுக் குழு அழைப்பு விடுக்கின்றது.

துன்பக் கடலின் மத்தியிலும் நம்பிக்கைக் கீற்றுக்களை பற்றிப்பிடிக்க அவர்கள் முயல்கிறார்கள். ஒரு சிறு வீட்டுடனும், ஒரு துண்டு வலையுடனும் தம் எதிர்காலத்தை மீளக்கட்டியமைக்க கற்பனையில் ஈடுபடுகின்றார்கள். ஆனால், அவர்கள் மீது விழும் சொல்லம்புகளும் கூடி வாழும் நெருக்கடியும் அவர்களை அரியண்டப்படவும் வைக்கிறது. இது மேலும் அதிகரிக்குமாயின் எதிர்காலம் பற்றிய அவர்களின் கற்பனை ஆற்றலை மழுங்கடித்து விடும் என நாம் அஞ்சுகிறோம். கூடி வாழ்வை ஒழுங்கானதாகவும் இதமானதாகவும் ஆக்கி, அவர்கள் தம் எதிர்காலம் பற்றிய கற்பனைச் சிந்திப்பில் ஈடுபட வழிவகுக்க வேண்டியது அவசியமாகும். நாம் அனைவரும் இணைந்து அவர்களுக்கு அருகிருப்போம்.

- அரங்கச் செயற்பாட்டுக் குழு.

# நெல்லியடிப் பகுதியில் நேற்று ரணில்...









இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கென நேற்று யாழ்.வந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதையும், கரவெட்டியில் அமைந்துள்ள சுனாமி அனர்த்தப் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணியின் அலுவலகத்துக்கு அவர் செல்வதையும், அங்கு டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் சகிதம் கலந்துரையாடலில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

ஹரே கிருஷ்ணா

## சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஆதரிக்க கோகுலம் சிறுவர் இல்லம் முன்வந்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை கோகுலம் சிறுவர் இல்லம் ஏற்று பராமரிக்க முன்வந்துள்ளது. இவ் விடயம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

கோகுலம் சிறுவர் இல்லம்
607A, நீர்கொழும்பு வீதி,
மாபொல, வத்தளை.
Tel : 2948398

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
188, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு 13.
Tel : 2433325

**University of Jaffna, Jaffna**
Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE) Project
INTENSIVE COURSE IN ENGLISH

The students those who have applied to follow the above course are required to be present at the Kailasapathy Auditorium on 10.01.2005 at 10 a.m.

IRQUE Project
University of Jaffna,
Jaffna.

Deputy Director
Administration.

(சி-40260)(18-45-43)

## கண்ணீர் அஞ்சலி

05.01.2005 அன்று இறைபதமடைந்த எமது அரச முதியோர் இல்லப் பணியாளர் செல்வி ஞா.மேரி லூட்ஸ் அவர்களின் அன்புத் தந்தை

### ஆ.ஞானப்பிரகாசம்

அவர்களின் மறைவையிட்டுத் துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரச முதியோர் இல்லம்,
கைதடி.

அத்தியட்சகர்,
உத்தியோகத்தர்,ஊழியர்கள்,
முதியோர்கள்.

(40504)(29-43-45-18)

## விவசாய பீட மாணவர்களுக்கான பரீட்சை ஆரம்பம்

இடைநிறுத்தப்பட்ட அனைத்துப் பரீட்சைகளும் எதிர்வரும் 17.01.2005 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: பனை, தென்னை வள சான்றிதழ் கற்கை நெறி இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளும் 17.01.2005 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

நேரசூசியை விவசாயபீட விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

விவசாயப் பீடாதிபதி,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-40258)(38-43-45-18)

## விவசாய பீட முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு விரிவுரைகள் ஆரம்பம்

விவசாய பீடத்துக்கு 2004/2005 ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய மாணவர்களுக்கும் மற்றும் இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்குமான முதலாம் அரையாண்டு விரிவுரைகள் 07.02.2005 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. அன்றையதினம் காலை 9.00 மணிக்குப் புதிய மாணவர்களுக்கான அறிமுக வைபவம் நடைபெறும்.

ஏற்கனவே பதிவுசெய்தவர்களைத் தவிர, புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் தங்கள் பதிவுகளை பல்கலைக்கழகத்தில், மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*குறிப்பு:* புதிய அனுமதிபெறும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலை விவசாயப் பீட விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

விவசாயப் பீடாதிபதி,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-40257)(38-43-45-18)

இன்று முத்து விழா காணும் அன்னையின் கருணையின் பெருமையே பல்லாண்டு பல்லாண்டு இனிது வாழ்கவே!

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி

### தங்கம்மா அப்பாக்குட்டி J.P

எங்களுக்கு மாசியிலே நல்லாசிகள் வழங்கும் மாணிக்கமே, தெய்வீக ஞாலத்தை தெய்வீக மின்சாரத்தை முறையாகப் பாய்ச்சுகின்ற முறைகளை எங்களுக்கு முறையாக புகட்டுகின்ற எங்கள் அன்னையை இன்றைய நன்நாளில் அவர் பாதம் பணிந்து நல்லாசிகள் பெற்று ஏற்றிப் போற்றி மேன்மேலும் பல்லாண்டு காலம் இனிது வாழ்க வாழ்கவே என்று வாழ்த்துகிறேன்.

329, பிரதான வீதி,
பருத்தித்துறை. (சி-40262)(38-43-45-18)

வாழ்த்துவோர்:
K.N. சச்சிதானந்தன்.

## சங்கானை ஆஸ்பத்திரியில் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு

வலி.தென்மேற்கு, ஜன.6

சங்கானை அரசின் வைத்தியசாலையில் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

ஏற்புநோய் தடுப்பூசி, உட்பட மற்றும் பல மருந்துகள் இங்கு கையிருப்பில் இல்லாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. (எ-135)

## தீவகக் கல்விவலய நட்புதவியாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

தீவக வலயப் பாடசாலைகளில் நட்புதவியாளர்களாகக் கடமையாற்றும் சகல ஆசிரியர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வலயக்கல்விப் பணிமனையில் சமூகமளிக்குமாறு தீவகவலயக்கல்விப் பணிப்பாளர் வி.மகேந்திரன் கேட்டுள்ளார். (எ-12)

## பூநகரி கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி

பூநகரி,ஜன.6

பூநகரி கடற்பிரதேசத்தில் மீனவர்கள் இன்று முதல் மீன்பிடிக்கச் செல்லலாம் என்று கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலையால் கடலினுள் நஞ்சுப்பதார்த்தம் கலந்திருக்கலாமென்ற அச்சம் காரணமாக இது வரை நாளும் பூநகரிக் கடற்பரப்பினுள் மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. அத்தடை இன்றிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும்,

மீனவர்கள் மன்னார்குடா, பூநகரி ஆகிய கடற்பிரதேசங்களில் வழமைபோல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடலாமெனவும் கடற்புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (எ-13-291)

## நுளம்புவலைகளுக்கு மருந்து தெளிக்கும் பணி

வலி.தென்மேற்கு,ஜன.6

பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள வீடுகளின் பாவனையில் உள்ள நுளம்பு வலைகளுக்கு "பேமத்திரின்" மருந்து தெளித்துக் கொடுக்கும் பணி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையில் தங்கள் வீடுகளில் பாவிக்கப்படும் நுளம்பு வலைகளைச் சுத்தப்படுத்தி இந்த மருந்தினைத் தோய்த்துக்கொள்ள முடியும் என்று பண்டத்தரிப்பு பொதுச்சுகாதார பரிசோதகர் பொ.சிவரூபன் தெரிவித்துள்ளார். (எ-135)

## நெடுந்தீவில் உள்ளூர் பஸ்சேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு,ஜன.6

கடந்த முதலாம் திகதி முதல் நெடுந்தீவுப் பகுதிக்கான உள்ளூர் பஸ் சேவை தடைப்பட்டுள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நெடுந்தீவு மேற்குப் பகுதியிலிருந்து வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கும் மற்றும் படகுகள் மூலம் வெளியிடங்களிலிருநது வருவோரும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பஸ்ஸில் திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் பஸ் சேவை தடைப்பட்டதாக கூறப்பட்டது. எனினும், இதுவரை திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

பஸ்சேவை இடம்பெறாத வேளைகளில் படகுகள் சேவையில் ஈடுபடும் நேரத்தைக் கருத்திற்கொண்டு நெடுந்தீவு ப.நோ.கூட்டுறவுச் சங்கமோ அல்லது நெடுந்தீவு பிரதேச சபையோ விசேட போக்குவரத்துத்துச் சேவையை நடதத வேண்டும் என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த விசேடசேவைகளும் நடத்தப்படவில்லை. (எ-112)

## கல்வேலிகளை மீள அமைக்க நிதியுதவி

நெடுந்தீவு,ஜன.6

கடல் அனர்த்தத்தால் நெடுந்தீவு கரையோரப் பிரதேசத்தில் சேதமடைந்த குடியிருப்பாளர்களது கல்வேலிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கான நிதியுதவியினை பிரான்ஸில் உள்ள நெடுந்தீவு மக்கள் செயற்பாட்டு ஒன்றியம் வழங்கியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாலை பாதிப்படைந்த ஒவ்வொரு குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கும் நேரடியாகச் சென்ற இந்த ஒன்றியத்தின் நெடுந்தீவுக் கிளை உறுப்பினர்கள் கல்வேலிகளை மீள அமைப்பதற்கான நிதியினை வழங்கியிருந்தனர்.

இதற்கென ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-112)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சித்த மருத்துவ அலகு அறிவித்தல்

சித்த மருத்துவ அலகுக் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் 10.01.2005 திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

துணைவேந்தர்
05.01.2005 *(C-40259) (14-43)*

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

வெற்றிலைக்கேணி முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் கோயிலில்

## விசேட பூசையும் பிரார்த்தனையும்

கடந்த 26-12-2004 ஆம் திகதி சுனாமிப் பேரலை இயற்கை அழிவினால் உயிரிழந்த ஆத்மாக்கள் சாந்தியடையவும் காயமுற்ற அன்பர்கள் குணமடையவும் மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய இடங்களில் உள்ள அடியார்களுக்கு வெற்றிலைக்கேணி, முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயத்தில் 07-01-2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 12 மணிக்கு நெய்த்தீப மேற்றி விசேட பூசையும் பிரார்த்தனையும் நடைபெறும்.

(சி-40261) (14) - ஆலய பிரதமகுரு இ.மண்டலேஸ்வரக் குருக்கள்.

# மரண அறிவித்தல்கள்

## மரியநாயகம் ரயிற்ரஸ் யேசுதாசன்

(ரயிற்ரஸ் தொலைத்தொடர்பக உரிமையாளர் - மாதகல்)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மரியநாயகம் ரயிற்ரஸ் யேசுதாசன் 04.01.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியநாயகம் - எலிசபெத் தம்பதிகளின் அன்பு மகனும் போயிட்டி, இளவாலையைச் சேர்ந்த இராயப்பு - காலஞ்சென்ற சந்தலூசியா (செல்வம்) ஆகியோரின் அன்பு மருமகனும் இராஜகுமாரியின் அன்புக் கணவரும் மேரிசாலட் (கொழும்பு), மேரிபற்றிமாவைலட் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யேசுதாசன் (இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர், கொழும்பு) அவர்களின் மைத்துனரும் கபிலஸ், லக்சிகா, புறூட்டஸ், வேரட, கீர்த்திகா, சுசந்திகாவியாட் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றெஜினோல்ட் (கொழும்பு), கிருசாந்தி (கொழும்பு) நிரோஜன் (டுபாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.01.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மாதகல் புனித தோமையா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தபின்னர் மாதகல் தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*மாதகல்.* (40500)(43-14)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி தில்லையம்பலம் வள்ளியம்மா

அரியாலை, நாவலடியை வசிப்பிடமாகவும் இலந்தைக்குளம் வீதி, அரியாலையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் வள்ளியம்மா 02.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் தளையசிங்கம், செல்வராசா, யோகராசா, பாமா, புஸ்பா, அரியராசா, ஆனந்தராசா, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் தவராசா, சண், பவளம், சறோஜா, சலா, குஞ்சு, சுகந்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2005) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலந்தைக்குளம் வீதி,*
*அரியாலை.* (40503)(43-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆபரணம் ஞானப்பிரகாசம்



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி புனித அந்தோனியார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆபரணம் ஞானப்பிரகாசம் அவர்கள் நேற்று (05.01.2005) புதன்கிழமை காலை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற மேரிமாகிறேற் அவர்களின் அன்புக் கணவரும் பற்றிமாமலர் (பனை அபிவிருத்திச்சபை - எழுதுவினைஞர், கிளிநொச்சி), சூசைநாதர் (சிக்மா வோட்டர் பம்ப், கொழும்பு), மேரிலூட்ஸ் (அரச முதியோர் இல்லம், கைதடி), லூர்து மேரி, புதுமைமலர், ஞானாமிர்தம் (ஆசிரியை, யா/நாவற்குழி ம.வி), ஜேசுதாசன் (டோகா), மேரிகிறேஸ், றோசலின், ஈஸவரி, இம்மானுவல், ஈஸ்வரன் (நடத்துநர், காரைநகர் சிற்றூர்திச்சங்கம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நீக்கிலாஸ், சந்திரகுமாரி, ஜோர்ஜ் கனகரத்தினம், அன்ரனிராஜ், மரியநாயகம், சியாமளா, காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் ஜெகன், சொரூபினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கலிஸ்ரா (A/L 2005 யா/கனகரத்தினம் ம.ம.வி), சுஜித்திரா, அன்ரன் தேவகுமார் (யு.என்.எச்.சி.ஆர். - கிளிநொச்சி), அனிற்றா, கசிஸ்டா, திலானி, றெபேக்கா, அருள்றாஜ், மரியராஜ், மரியமலர், ஜீவமலர், புஷ்பமலர், டிறோன், யேசுதன் றொசான், கஜனி, கனியூட, கஜன், சையூட், சங்கீதா, விதுஷனா, கீர்த்தனா, தீபிகா ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நிகழ்வுகள் இன்று (06.01.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நாவற்குழி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நாவற்குழி புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் கோயிலடி,*
*நாவற்குழி, கைதடி.* (40501)(43-14)

தகவல்:
நீ.பற்றிமாமலர் (மகள்).

# சுனாமியால் பாதுகாவலர்களை இழந்த சிறுவர்கள் தென்பகுதியில் கடத்தல்?

கொழும்பு,ஜன.6

சுனாமி அனர்த்தத்தில் சிக்குண்டு அநாதைகளாகிப்போன தென்பகுதியைச் சேர்ந்த சிறுவர்களை இனந்தெரியாத குழுவொன்று கடத்தி வருகின்றது என்று தமக்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

சுனாமிப் பேரலையில் சிக்கிப் பெற்றோரைப பறிகொடுத்த பல நூற்றுக்கணக்கான சிறார்கள் தென்பகுதியிலுள்ள அகதிமுகாம்களிலும் காயப்பட்டவர்கள் வைத்தியசாலைகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த சில தினங்களாகப் பல சிறார்கள் மேற்படி இடங்களிலிருந்து திடீர்திடீரென காணாமற்போயுள்ளனர். பாதுகாவலர்களோ, பெற்றோர்களோ இல்லாத இந்தச் சிறார்கள் கடத்தப்படுகின்றமை குறித்துப பொலஸாருக்குத் தகவல்கள் கிடைத்த போதும் அதை உறுதிசெய்யமுடியாத ஒரு நிலை தோன்றியிருந்தது.

நேற்றுமுன்தினம் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சகோதரர்களான சேனுர பத்மராஜ்தாச (வயது - 7), பினாதரி பத்மராஜ்தாச (வயது - 5) ஆகிய இரு சிறுவர்களும் திடீரென காணாமற்போயுள்ளனர். இவர்கள் இருவரையும் இனந்தெரியாத இரு நபர்கள் கூட்டிச்சென்றனர் என நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தை அடுத்தே பொலீஸார் உஷாரடைந்துள்ளனர். இதேவேளை, வைத்தியசாலைகளில் பல சிசுக்கள் ஆள்மாறாட்டம் அடைந்துள்ளன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(எ-க)

# இந்திய மீனவர் அத்துமீறல் மீண்டும் அதிகரிக்கின்றது

கொழும்பு,ஜன.6

வடக்கு - கிழக்கு கடற்பிரதேசங்களில் இந்திய மீன்பிடி ட்ரோலர்களின் அத்துமீறல் அதிகரித்து வருகிறது என இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சுனாமி கடற்பேரழிவைத் தொடர்ந்து இலங்கை மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர். இந்த நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டே இந்திய மீனவர்கள் கடல் எல்லையைக் கடந்து இலங்கைப் பகுதிக்குள் வந்து மீன்பிடித்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் வடக்கு கடற்பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான இந்திய ட்ரோலர்கள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளன. நேற்று அதிகாலை மன்னார் கடற்பரப்பில் சுமார் ஐநூறுக்கும் அதிகமான ட்ரோலர்கள் அத்துமீறி பிரவேசித்ததைத் தாம் அவதானித்தனர் எனவும் அதே சமயம் மன்னார் வங்காலைக் கடலிலும் இருபதுக்கும் மேற்பட்ட இந்திய ட்ரோலர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மற்றும் தென்பகுதி மீனவர்கள் கடலில் மீன்பிடிப்பதைப் பெரும்பாலும் தவிர்த்து வருகின்றனர். மறுபுறம் அநேகமான மீனவர்கள் தமது மீன்பிடி வள்ளங்களையும் உபகரணங்களையும் இழந்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்ட பிரதேசங்களை துப்புரவு செய்ய உதவுமாறு அழைப்பு

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைத் துப்புரவுசெய்து, ஒழுங்கமைப்பதற்குப் பொதுஅமைப்புகளின் உதவியைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நாடியுள்ளது.

இதுதொடர்பாக, பேரவை நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கை வருமாறு:-

இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களில் மீட்புப்பணியும், துப்புரவுப் பணியும் தொற்றுநோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

இயற்கையின் சீற்றத்தால் மக்கள் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டபோது, உணவு, உடை என அனைத்து உதவிகளையும் விரைந்து செயற்படுத்திய நீங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதேசங்களையும் புனரமைக்க வாருங்கள்.

எமது மக்களுக்கான பணிகளை நாமே செயற்படுத்த வேண்டியுள்ளதால், அனைத்துக் கல்வி நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து மக்கள் பணியில் ஈடுபட்டுவரும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினருடன் தொடர்பு கொண்டு வாகன வசதிகளைப் பெற்று, இந்த அளப்பரிய மக்கள் பணியில் இணைந்து கொள்ளலாம் - என்று அதிலுள்ளது.

(எ-12)

# நெதர்லாந்து அரசாங்கம் மீள்கட்டுமானத்துக்கு உதவும்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையின் நிவாரண நடவடிக்கைகளுக்கும் புனரமைப்புச் செயற்பாடுகளுக்கும் நெதர்லாந்து அரசு முழுமையான ஆதரவு வழங்குமென நெதர்லாந்துப் பிரதமர் ஜான் பிற்றர் பல்கணன்ட், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் உறுதியளித்தார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி திருமதி குமாரதுங்கவுடன் தொலைபேசி ஊடாக உரையாடிய நெதர்லாந்துப் பிரதமர் இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் பணிக்கு நெதர்லாந்து முழுமையான பங்களிப்பைச் செலுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கொழும்பில் அறிவிப்பொன்றை விடுத்த கொழும்பிலுள்ள நெதர்லாந்துத் தூதுவர் திருமதி சுசான் பிளங்கார்ட், மனிதநேயப் பணிகளிலும் தமது அரசு, இலங்கைக்கு உதவுமென்று உறுதியளித்தார்.

இலங்கையில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் யுனிசெவ், யு.என்எச்.சி.ஆர், உலக உணவுத் திட்டம் போன்றவற்றிற்கு வழங்குவதற்காக 70 லட்சம் யூரோக்களை நெதர்லாந்து, ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு வழங்கியுள்ளது.

இதேவேளை,பிராந்தியத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேற்கொள்ளும் பணிகளுக்காக நெதர்லாந்து ஏற்கனவே 2 மில்லியன் யூரோக்களை வழங்கியுள்ளது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்டவுடன் நிவாரணப் பொருள்கள் அடங்கிய இரு விமானங்களை நெதர்லாந்து இலங்கைக்கு அனுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

( எ-க)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சதாசிவம் சின்னையா ஆசாரியர்**
**(அதிபர், சின்னையா இரும்புத் தொழிலகம்)**

திதி: 06.01.2005

எங்கள் குடும்பத் தலைவர் சதாசிவம் சின்னையா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று (06.01.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி. (40511)(29-16-18) - குடும்பத்தினர்.



## பொருளியற் கல்லூரி

நாவலர்றோட், யாழ்ப்பாணம். (இரு இடத்திலும்) கே.கே.எஸ்.றோட், இணுவில்.

A/L 2007

மீண்டும் ஒரு புதிய பிரிவு
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் : 08.01.2005 சனி

| A/L 2007 | யாழ். நகரில் | இணுவிலில் |
| --- | --- | --- |
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| நாடக - அரங். | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

இப்பிரிவுக்கு உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.
(40469)



A/L 2007

D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)

கலை வர்த்தகம்
ஆரம்பம்:
09 ஜனவரி 2005 - ஞாயிறு காலை 8.00 மணி



## தேவை

தையல் வேலை தெரிந்த ஆண்கள் தேவை.

குமார் தையல் அகம்
T.P: 0212223092
K.K.S. வீதி, 3ஆம் கட்டை,
தாவடி, கொக்குவில்.
(40509)



## நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது.
குதூகல ஆரம்பம்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30.,9.30 (பு.நே.)
இலங்கை மண் தாவடியின் மைந்தன் ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த




ராமகிருஷ்ணா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின அதிரடி வெளியீடு



## நிரஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், த்ரிஷா நடித்த
சாமி (ரீரன்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
AIR FORCE -1
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)



## ராஜா யாழ்ப்பாணம்

விஜயகாந் லய சீதா சரத்பாபு ராதாரவி நடித்த
கஜேந்திரா
காட்சிநேரம்: 10.30, 2.30,6.30,9.30 (பு.நே.)



## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
அர்ஜுன் (இருவேடம்)
சாயாசிங் லைலா
வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா



தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.)
(C/39654)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வானை வேலுப்பிள்ளை



சரசாலை வடக்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (05.01.2005) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமரர் செல்லாச்சி, அமரர் தங்கமுத்து, அமரர் அன்னமுத்து, பொன்னையா ஆகியோரின் சகோதரியும் பாக்கியநாதன் (U.K.), சித்திராதேவி, சிதம்பரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராணி (U.K.), சிவபாதம், ரோகிணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரஞ்சனா (U.K.), மோகனா (சுவிஸ்), தயாளன் (U.K.), யதுகரன், சறோன்ராஜ் (U.K.), சஞ்சய்ராஜ் (U.K.), அபிநயா (U.K.), பாலச்சந்திரன் (U.K.), கோபிதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரதீப் (U.K.) இன் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சரசாலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (06.01.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொம்பிகுளம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சரசாலை வடக்கு,* செ.வேலுப்பிள்ளை (கணவர்)
*சாவகச்சேரி.* (40505)(29-16-18) வெ.சிவபாதம் (மருகன்).

### திருமதி முத்தையா தனலட்சுமி

யாழ்.ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி முத்தையா தனலெட்சுமி (முன்னாள் யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்) நேற்று (05.01.2005) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தளையசிங்கம் கனகம்மா, மல்லிகா, மலர் பத்மநாதன் ஆகியோரின் சகோதரியும் குருநாதன் (படப்பிடிப்பாளர், மிருசுவில்), சரஸ்வதி (இந்தியா), விசயநாதன் (ஹொலண்ட்), காலஞ்சென்ற லீலாவதி (யாழ். போதனா வைத்தியசாலை தாதி) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2005) வியாழக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*57, பருத்தித்துறை வீதி,* வி.இராசேஸ்வரன்
*யாழ்ப்பாணம்.* (40510)(29-16-18) (மருமகன்).

### கணபதிப்பிள்ளை பிரபலசிங்கம்

மண்டைதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை பிரபலசிங்கம் நேற்று (05.01.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பார்வதி (சின்னம்மா)வின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னன் தம்பதிகளின் அன்பு மகனும் ஆறுமுகம் பொன்னம்மாவின் மருமகனும் சின்னம்மாவின் சகோதரனும் மற்றும் சிவகுருநாதன், தங்கச்சிப்பிள்ளை, சின்னத்துரை காலஞ்சென்றவர்களான பெரியதம்பி, வள்ளியம்மை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 70, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*70, இராஜேஸ்வரி வீதி,*
*நாயன்மார்கட்டு,* பார்வதி,
*யாழ்ப்பாணம்.* (40508)(29-16-18) (சின்னம்மா- மனைவி).



நேற்று முன்தினம் யாழ்.வருகைதந்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மாறியோ செனறி நேற்று முல்லைத்தீவுக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். அவருடன் சென்ற குழுவினர் அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்காக திருக்குடும்பக் கன்னியர் மடம் அமைந்திருந்த இடத்தில் ஜெபிப்பதையும், கிளிநொச்சி அரசியற்துறை நடுவப் பணியகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவதையும் முதல் இரு படங்களில் காணலாம். தமது விஜயம் தொடர்பாக நேற்றைய உதயனில் முதற்பக்கத்தில் பிரசுரமான செய்தியை (படத்துடன்) யாழ்.ஆயர் இல்லத்தில் வைத்து அவர் பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். யாழ். ஆயர் அதிவண.தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகையும் படங்களில் உள்ளார். (எ-13)

# ஆளுநர் ரிரோன் இன்று வவுனியாவுக்கு விஜயம்

கொழும்பு,ஜன.6

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களின் தற்போதைய நிலைவரம் பற்றி வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள உயர்மட்ட மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. அந்த மாநாட்டில் பங்குபற்றவே ஆளுநர் வவுனியா வருகின்றார்.

இம் மாவட்டங்களின் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், படை உயரதிகாரிகள், வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பிரதிநிதிகள் ஆகியோர் இந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள - வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட - ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண புனருத்தாரண குழுவிற்கு ஆளுநர் தலைமை வகிக்கின்றார்.

ஆளுநருடைய செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம் இம் மாநாட்டில் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க-164-13)

# வவுனியா அரச அதிபர் பதவியேற்பு

வவுனியா மாவட்டத்தின் புதிய அரச அதிபராக எஸ்.சண்முகம் பதவியேற்றுள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளாக வவுனியா அரச அதிபராக இருந்த கே.கணேஸ் யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

யாழ்.மாவட்ட அரச அதிபராக இருந்த எஸ்.பத்மநாதன் உலக வங்கியினால் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கட்டப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகள் வடக்கு - கிழக்கில் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 20 வருடகால யுத்தம் காரணமாக நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்ட பல வீடுகள் ஆழிப்பேரலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது. (எ-க)

# நிவாரணப் பணிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் தாக்கங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசிடம் தயாரான ஒரு பொறிமுறை - வழிமுறை - இருக்கவில்லை. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உடனடியாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் துரித நடவடிக்கைகளில் இறங்கியது. மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் எமது கழகம் இப்போதும் காத்திரமாக ஈடுபட்டுவருகின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ஏனைய அமைப்புக்களை தமிழ்ப் பகுதிகளில் செயற்பட அனுமதிக்கவில்லை எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால், நாம் அப்படி ஒருபோதும் செய்ததில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்ற ஒரே நோக்குடனேயே செயற்பட்டு வருகிறோம். வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களுக்கும் பாகுபாடற்றவகையில் உதவிசெய்கிறோம்.

கிழக்கிலே திருக்கோவிலில் வைத்து எமது நிறுவனத்தால் கொண்டு செல்லப்பட்ட நிவாரணப் பொருள்கள் விசேட அதிரடிப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. மட்டக்களப்பில் எமது அமைப்பின் நிவாரணப் பொருள்கள் 10 மணித்தியாலங்களுக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டன. திருகோணமலையிலும் இதே நிலையே.

எனவே, எமது பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அனைத்துத் தரப்பினரும் எமக்கு உதவ முன்வரவேண்டும். எம்மைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு மருந்துப் பொருள்கள் இன்னும் வழங்கப்படவில்லை. அரசு குறிப்பிட்டுள்ள பட்டியலில் இந்தப் பகுதிகள் இடம்பெறவில்லை.

எமது வேலைத்திட்டங்களை சர்வதேச நிறுவனங்கள் நேரடியாக அவதானித்து வருகின்றன. அவை எமது குறைகளாகச் சுட்டிக் காட்டுகின்றன. அப்படிக் குறைகள் இருப்பின் அவற்றைத் திருத்திக்கொள்கிறோம். தமிழர்கள் அனுப்பும் உதவிகளை மட்டும் கொண்டு அப்பகுதிகளை கட்டியெழுப்பமுடியாது - என்றார் அவர். (எ-க-13)

# நிவாரணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி சந்திரிகா வழங்கியிருக்கின்றார். இந்த உத்தரவுப்படி தமிழர் தாயகப் பகுதிகளைச் சேர்ந்த - படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள - யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் நிவாரணப் பணியை ஆற்றும் பொறுப்பு இராணு அதிகாரிகளுக்குப் போயிருக்கின்றது. இந்த மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் சிவில் அதிகாரிகள் இந்த விடயத்தில் மாவட்ட இராணுவத் தளபதியின் உத்தரவுப்படியே இயங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றது - என்றார். (எ)

# ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு அவசியம்.

ஐக்கிய நாடுகள் சபையின் அனர்த்த நிவாரணக் குழுக்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஊடாகப் பயணம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதித்துள்ளார்கள்.

தற்போது விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு நிலவி வருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி நாட்டில் நீண்டகாலமாக நிலவிவரும் இனமுரண்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை இரு தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (எ-க)

# இந்தியாவின் நேரடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு பதிலளித்தார்.

சுனாமிப் பேரலையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆனாலும் இலங்கைக்கு உதவவேண்டும் என்ற மனிதாபிமான உணர்வுடனேயே எந்த விதமான எதிர்பார்ப்பும் இன்றி இந்தியா உதவியது.

இலங்கையும், இந்தியாவும் பாரம்பரிய, கலாசார, பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டவை. காலங்காலமாக நமக்கிடையே நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தியுள்ளோம். அரசியல், பொருளாதார, வர்த்தகத் தொடர்புகளும் சிறப்பாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இப்படியான நிலையில், பாதிக்கப்பட்டவுடன் முதன் முதலாக இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டியது இந்தியாதான். இந்தப் பெருமை எமக்கு உண்டு.

இலங்கையை மீளக் கட்டியெழுப்பவும், உட்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்கு ஆரம்ப உதவியாகவும் நூறுகோடி (இந்திய) ரூபாவை இலங்கைக்கு வழங்குவதாக எமது பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார்.

இந்திய டாக்டர்கள், பொறியியலாளர்கள், மருத்தவ உதவியாளர்கள் உட்பட ஆயிரம் பேர் இலங்கையில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் இந்தியக் கடற்படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறனர்.

பெருந்தொகையான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய மருந்து வகைகள் ஏற்கனவே இந்தியாவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய டாக்டர்கள் காலி, மாத்தறை, தங்காலை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் வைத்திய முகாம்களை நடத்துகின்றனர்.

காலித்துறைமுகத்தில் இந்தியக் கடற்படைக் கப்பல்கள் தரித்துநின்று மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளன. விமானப்படையினரும் இலங்கை இராணுவத்தினரும் பரஸ்பர நட்புணர்வுடன் இணைந்து செயற்படுகின்றனர். இலங்கை அரசும், இராணுவமும் இந்திய மீட்புப்பணியாளர்களுக்கு சகல விதமான ஒத்துழைப்புக்களையும் வழங்கிவருகின்றனர் - என்றும் இந்தியத் தூதுவர் கூறினார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைத் தவிர ஏனைய பாதிக்கப்பட்ட பிரதேசங்களுள் பெரும்பாலானவற்றுக்குத் தாம் நேரில்சென்று மீட்புப் பணிகளைப் பார்வையிட்டார் எனவும் இந்தியத் தூதுவர் குறிப்பிட்டார்.

இன்னும் சில தினங்களில் திருகோணமலைக்கு வைத்தியசாலை வசதிகளைக் கொண்ட இந்திய வைத்தியக் கப்பல் ஒன்று அனுப்பப்படவுள்ளது. அதில் 25 டாக்டர்களும் 80 முதல் 90 வரையிலான வைத்திய உதவியாளர்களும் பணிக்கமர்த்தப்படுவர் எனத் தூதுவர் நிருபமா ராவ் தெரிவித்தார்.

இலங்கைக்கு முதன் முதலாக இந்தியாவே நிவாரண உதவிகளையும் அப்பணிக்கான படையினரையும் வழங்கியது. ஆனால், தொடர்ந்து அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் இராணுவமும் பெருமளவில் தரை இறக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவுக்கு ஆதங்கத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளதா? - என செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

நிச்சயமாக இல்லை. இந்தியப் பிரதமரும், அமெரிக்க ஜனாதிபதியும் ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

மேலும் சர்வதேச மட்டத்தில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், நெதர்லாந்து, கனடா போன்ற நாடுகள் ஒரு வலையமைப்புக்குள் நிவாரணப் பணிகளையும் மீள் கட்டமைப்புப் பணிகளையும் விரிவான முறையில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன. இது சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் இணக்கப்பாடு இதில் எந்தவிதமான ஆதங்கங்களுக்கு அவசியம் இல்லை. அப்படி இருப்பதாக வெளிவந்த செய்திகள் வெறும் ஊகத்தின் அடிப்படையிலானவை - என்று தூதுவர் நிருபமா ராவ் கூறினார். (எ-க)

# கொலின் பவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான அமெரிக்க நிறுவனத்தின் நிர்வாகி அன்ட்ரு நாட்சியஸ்ும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லவுள்ளார்.

தமது விஜயத்தின் பின்னர் நாளை மாலை கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தில் கொலின் பவல் செய்தியாளர்களைச் சந்திக்கவுள்ளார். (எ-க)


எம்முடன் இணைவோர் உயர்கல்வி பெறுவது நிச்சயம்

**வித்னா கல்வி நிறுவனம்**

**A/L 2007** ஆரம்பம்: 08-01-2005 8மணி

கலை, வர்த்தக வகுப்புகள்

Acc.- திரு.பாலவாசன்
Com.- திரு.யசோ பிரிவு I
Log. - திரு.சயந்தன்
Tam.- திரு.குழந்தை பிரிவு I
Geo.- திரு.பாபு
Hist.- திரு.பத்மன்
Chri.- திரு.வசந்தன் (சி-40231)
Eco.- திரு.உதயன்
திரு.முரளி பிரிவு II
H/C.- திரு.பத்மராஜா
திரு.லிங்கம் பிரிவு II
Hin.- திரு.N.T.தரன்
P/Sci.- திரு.ஸ்ரீரங்கநாத்
Drama.- திரு.மதி

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.


# மரண அறிவித்தல்

## துரையப்பா இராசதுரை

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நவாலி அந்திரான்பதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா இராசதுரை அவர்கள் நேற்று (05.01.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.* (40512)

தகவல்:
பொ.தனபாலச்சந்திரன்
(சோதி - மருமகன்).


**பிரத்தியேக வகுப்பு**

**A/L 2007**

பொருளியல் S.வரதராஜன்

ஆரம்பம்:
07.01.2005 வெள்ளி 4.00 (ப.நே.)

D.C.M. (சி-40195)

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**2007 A/L**

கலை, வர்த்தக,
கணித, விஞ்ஞான
வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.
* நேர அட்டவணை
அலுவலகத்தில
(40438)

SHAMROCK
J/EACHCHAMODDAI RD.

**SPOKEN ENGLISH**

ஆசிரியர்
Y. ஜெயந்தன்
புதிய பிரிவு
ஆரம்பம்:
07.01.2005 வெள்ளி
பி.ப. 5 மணி

நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி,
யாழ்நகர். (40474)

**NEW SCIENCE COLLEGE**

இணைந்த கணிதம்

A/L 2007

Sat., Sun. -11.00 - 1.00
(ப.நே.)

By:P.செந்தில்நாதன் B.Sc. (40463)

**NEW SCIENCE CENTRE**

AL2007

கணித,
விஞ்ஞானப் பிரிவு

CHE. - திரு.அன்பழகன்
PHY. - திரு.ஜெயசீலன்
திரு. பிரபா
BIO. - திரு.அல்போன்ஸ்
Maths - திரு.ரஜனி (சி-40240)


*இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*